குறள் நெறி

தமிழ் வாழ்க

(கட்சிச் சார்பற்ற அரசியல், இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு)

திங்களிருமுறை வெளிவருவது ஆண்டுக் கட்டணம் ரூ. 5. ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனார்

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 பங்குனித்திங்கள் 2ஆம் நாள் (15-3-1964) | இதழ் : 5

தமிழை வளப்படுத்தும் பணி

ஆங்கிலத் தமிழ் அகராதி

ஆங்கிலத்தின் வளர்ச்சியும் ஏற்றமும் தமிழோடு ஒப்பிடுமிடத்து அண்மைக்காலத்திற்குரியன என்றாலும், இன்று உலகின் பெரும் பகுதி மக்களால் பயிலப்படும்மொழியாகும். கலைஇயல் அறிவியல்பற்றி அறிவதற்குரிய கருவி மொழியாகவும் இருக்கின்றது. ஆகவே இன்னும் நூறு ஆண்டுகட்கேனும் அதனைத்தவறாது பயிலவேண்டிய நிலையில் நம் நாடு உள்ளது. மேலை நாடுகளில் நாளும் வளர்ந்துவரும் பொறிஇயல், மருத்துவஇயல், வானவெளி இயல் பற்றிய நூல்களைத் தமிழில் பெயர்த்துக்கற்க வேண்டிய கடப்பாட்டுக்கு ஆளாகியுள்ளோம்.

ஆங்கிலத்தில் உள்ளவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க ஆங்கிலத் தமிழகராதி மிகவும் இன்றியமையாதுவேண்டப்படுவது ஒன்றாகும். இதனையறிந்த சென்னைப் பல்கலைக்கழகம் **அறிஞர் அ சிதம்பரநாதனார்** எம்.ஏ., பிஎச்.டி, எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் தனித்துறையொன்றை அமைத்து ஆங்கிலத்தமிழகராதி ஒன்றினை உருவாக்கும் பணியினை மேற்கொண்டுள்ளமையை யாவரும் அறிவர். A முதல் Q முடிய உள்ளசொற்களுக்கு ஆக்சுபோர்டு ஆங்கிலச் சிற்றகராதியை அடிப்படையாகக் கொண்டு இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. எஞ்சி இருப்பது இன்னொரு தொகுதியாக அடுத்து உரியகாலத்தில் வெளிவந்துவிடும். இதனோடு இத்தொண்டு முடிந்துவிட்டதாகக் கருதிவிடக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆக்சுபோர்டு ஆங்கிலச் சிற்றகராதி, சிறப்புப் பகுதியாம் அறிவியல், பொறியியல், மருத்துவ இயல் போன்றவைகளில் பயன்படும் தொழில் நுட்பச் சொற்களைக் கொண்டதன்று அறிவியல் பகுதியாம் அவைகளைத் தமிழின் வாயிலாகக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அத்துறைகளில் பயன்படும் கலைநுட்பச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் உண்டாக்கப் பெறுதல் வேண்டும். சைவசித்தாந்தக் கழகமும் சென்னை அரசும் இத்துறையில் சில நூல்களை வெளியிட்டுள்ளனர். ஆயினும் இன்னும் வெளிவரவேண்டியவற்றை நோக்க அம்முயற்சிகள் "கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு" என்றுகூறும் அளவினவே.

நாளும் முன்னேறிவரும் வெளிநாடுகளுடன் தமிழ்நாடும் ஒத்த நிலைக்கு வரவேண்டுமென்றால் புதியன புனையும் அறிவியற் கலைஞர்கள் விரைந்து பெருகுதல் வேண்டும். அவர்கள் வேற்று மொழிகள் வாயிலாக அறிந்து தமிழில்நூல்களை ஆக்கித்தருதல் வேண்டும். அதற்கு இன்னும் பன்னூறு ஆண்டுகள் செல்ல வேண்டும். அதுவரையில் வாளாயிருத்தல் இயலுமா? இவ்வாங்கிலத் தமிழ் அகராதித் துறையை நிலையான தாக்கி கலைத்துறைச் சொற்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்துதல் வேண்டும். இதுவரை வெளிவந்துள்ள ஆங்கிலக் கலைச் சொற்களையும் இனி வர இருக்கும் கலை நுட்பச் சொற்களையும் உடனுக்குடன் தமிழில் வெளிவரச்செய்தல் வேண்டும்.

ஆங்கிலத் தமிழ் அகராதி
இரண்டாம் தொகுதி வெளியீட்டு விழாவில்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
டாக்டர் அ. சிதம்பரநாதனாரிடம்
அகராதியைக் கொடுக்கும் காட்சி.

சப்பான் போன்ற நாடுகளில் ஒவ்வொரு வேற்று மொழிக்கும் ஒவ்வொரு குழுவை அமைத்து வேற்று மொழி நூல்களை எல்லாம் சப்பான் மொழியில் கொண்டுவந்து விடுகின்றனராம். அதனாலேயேகீழைநாடுகளின் தலைமை நாடாக அது விளங்குகின்றதுபோலும். ஆதலின் நாமும் ஆங்கிலத்தமிழ் அகராதிக் குழுப்போன்று, உருசியமொழி, செர்மன்மொழி ஆகியவற்றுக்கும் குழுக்களை அமைத்து அம்மொழிகளில் உள்ள அறிவியல் நூல்களைத் தமிழில் கொண்டுவரத் தலைப்படல்வேண்டும்.

ஆங்கிலத்தமிழ் அகராதிக் குழு, அதன் பணியாம் அகராதி உருவாக்குதல் முடிவுபெற்றவுடன் ஆங்கிலம் வழியாகத் தமிழ் நூலாக்கும் பணிக் குழுவாகச் செயல்படவேண்டும். மேலைநாடுகளில்தோன்றும் புத்தம்புதிய கலைகளைத்தமிழில்கொண்டுவரவேண்டும். ஆங்கிலம் படியாதோரும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள அறிவியற் கலை நூல்களைத் தமிழ் வழியாக அறியத்தகும் வசதி ஏற்படல்வேண்டும்.

பேரறிஞர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் தலைமையில் இயங்கும் இக்குழு தமிழுக்கு அளப்பரும் பணி செய்யும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழ் இனிச்சாகும்" — என்ற

வசை இக்குழுவினரால் நீங்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இரண்டாம் தொகுதியை வெளியிட்ட பேராசிரியர் பல்கலையறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அறிஞர்சிதம்பரநாதனார் ஆற்றலைப்புகழ்ந்து அவர் செயற்றிறனைப்பல படப்பாராட்டினார். ஆங்கிலத்தமிழ் அகராதிக்குழு வான்புகழ் அன்னைத் தமிழ்போல் என்றும் அழியாது.

தமிழின் வளமே தமிழர் வளம்

விலை 25 காசுகள்

பாடல் அரங்கம்

செந்தழலில் மூழ்கிய செம்மல்

அவன் பெரியசாமி

— க. இராமையா

1 பொங்கியெழுந் தென்கடலி னடுவே தோன்றிப்
பொதிகைமலைச் சாரலெலாம் புனலா யோடிப்
பொங்கரிடைத் தென்றலெனப் பூவோ டாடிப்
புகழ்மறவர் தென்பாண்டிக் கூடல் சேர்ந்து
சங்கமமர்ந் தகமகிழப் புறமு மார்ப்பச்
சதிராடி வந்தவளே! தமிழே! தாயே!
மங்காவுன் புகழ்வாழ வாழ்வா யுன்றன்
மக்களுளோம் மண்டமர்க்கு மயங்கா மள்ளர்.
2 சீராருந் தாயேநின் சேயே ளுேர்நாள்
செத்தபிணம் படையெடுத்து வருதல் கண்டேன்
போராட லேன்? பிணங்கள் தானே விழும்
பூசலெதற் கென்றிருந்தே ஞெ லன்னுய்!
நேராத செயல்நேரக் கண்டேன் வேலி
நெற்பயிரை மேய்வதனைக் கண்டு விட்டேன்
தேராதான் றன்மகளைப் பெண்டா ளர்க்குத்
திட்டமிட்ட செயல்கண்டே னந்தோ நொந்தேன்
3 காப்பதற்குக் கடமைகொண்டார் கய்மை கொண்டார்
கன்னல்தமி ழன்னையின் வாழ்வைப் போக்க
நாப்பறையு முழங்கிவிட்டார் நாசம் நாசம்
நாங்களினிப் பொறுப்பதில்லை யுறங்கோ மொல்லை
மாப்பெரிய போர்தொடங்கும் தீயே மூளும்
மண்டழலை யென்னுடலி லேற்றி மானங்
காப்பதற்கு முன்செல்வேன் வாரீர் வாரீர்
காளையரே சிங்கங்காள் என்றான் சென்றான்.
4 வந்தபகை முடித்திட்டு வாகை சூடி
வருபகையை யெதிர்நோக்குந் தமிழன் வீரம்
முந்தியுள கதையல்ல இதுதா னின்றும்
முடித்திடுவோம் பகையாவும் இல்லை யாகும்
குந்தியெழுங் குரங்குகளோ நாமெல் லோருங்
கொடுங்கூற்றப் புலியன்றே கொதித்தெழுந்து
வந்திடுமின் பகைமுடிமின் வாகை கொண்மின்
வல்லுடலென் முன்பலியென் றீந்தான் போந்தான்.
5 இராப்பகலா யென்றுமே யுன்னைப் போற்றி
யேற்றியுயர் புகழ்பாடிப் போந்த சாமி
திராவிடத்தின் மறவர்குலத் துயர்ந்த சாமி
தித்திக்கத் தமிழ்பரவிப் பாடுஞ் சாமி
அராவிடத்தி னதிகமென ஆர்த்த சாமி
அயல்மொழிக்கோர் அழிவுமணி யடித்த சாமி
சிராப்பள்ளி தந்திட்ட சின்னச் சாமி
செயலாலே யார்க்கு மவன் பெரிய சாமி.

சந்தனத் தமிழன்

— கவிஞர் முருகு சுந்தரம்

அமிழ்தமாம் தமிழைக் காக்க
ஆருயிர் நெருப்பில் தந்த
தமிழவேள் சின்ன சாமி
தமிழர்க்குப் பெரிய சாமி!
உமியினைப் போன்று மக்கள்
உலகினில் பலபேர் வாழ
இமயத்தைச் சிறிய தாக்கி
இவன்புகழ் எழுப்பி விட்டான்!

மக்களுள் மறவன்; ஆட்டு
மந்தையில் பிறந்த வேங்கை,
தக்கைகள் நடுவே மின்னும்
தனித்தவோர் தங்கக் கூர்வாள்;
சக்கைபோல் தமிழ ருக்குள்
சந்தனத் தமிழன்; அஞ்சிப்
பக்கத்தில் பதுங்கி டாமல்
பாய்கின்ற சிங்கக் குட்டி.

கொழுந்துவிட் டெரியும் தீயில்
குந்திய அப்பர் அன்று
செழுந்தமிழ்த் துணையி னாலே
செவ்வுடல் காத்துக் கொண்டார்!
அழிகின்ற உடலி தென்றே
அருந்தமிழ்ச் சின்ன சாமி!
முழுகினுய் இன்று செந்தீ
முத்தமிழ் காக்க வேண்டி!

குயிலெலாம் உன்பேர் கூவும்!
குன்றத்துத் தென்றல் கூட
வெயில்மறைந் திருக்கும் மாலை
வேளையுன் புகழை வீசும்!
மயல்தரும் தமிழ நங்கை
மாக்கவி வாணர் நாவில்
பயிலுறும் கால மெல்லாம்
பாடல்நீ பெற்று வாழ்வாய்!

மனக்கதவும் திறவாதோ!

படர்ந்திட்ட கொடியதனின் பரிதவிப்பைப்
போக்குதற்கே,
பாரியெனும் மன்னவனும் தன்தேரைத்
தந்திட்டான்!
இடர்பட்ட புலவரதன் வறுமைதனை
யொழிப்பதற்கே,
இனிமையுறக் குமணனுமே தன்தலையைக்
கொடுத்திட்டான்!
விட்டமுறுத்த வல்லூற்றின் வன்பிடியை
விடுப்பதற்கே,
வழங்கிட்டான் தன்தசையை சிபியென்பான்
புறவிற்காக!
நடன்மிடும் மயிலதனின் நலிவுதனை நீக்குதற்கே
நல்கிட்டான் சால்வையென நவின்றதுவே
வரலாறும்!

இந்நாளில் அதுபோல இன்தமிழ்க்காய்த் தன்னுடலை
இன்பமொடு எரிதணலில் இட்டுவிட்ட
ஏந்தலுமே,
இந்நாட்டில் இருக்கின்றான்! இன்னுருவாய்
வாழ்கின்றான்!
இகமுழுது போற்றுசின்னச் சாமியெனும்
பேராளன்!
மந்தமதி கொண்டோரின் அந்தகா ரமொடுக்க
மண்ணகத்தில் மகிமையுற மாண்டவழி
கண்டவனும்!
முந்தியெழு ஞாயிறது தருமுணர்வால்
அவன்செயலால்
மாநிலத்தில் மதியற்றோர் மனக்கதவும்
திறவாதோ?

— மதுரை க. பாண்டியன்

குறள் மலரே! வா!

— இளங்கம்பன்

உள்ளத் திருளகற்றும் ஒப்பற்ற வள்ளுவர்
உள்ளம் களிக்க உரைபகரும் — தெள்ளுதமிழ்ப்
பாவாண் இலக்குவனார் பண்பாட்டு நல்லிதழே !
வாவா குறள்மலரே ! வா !

தமிழகப் புலவர் குழுவின் பதினைந்தாவது கூட்டம்

'மே' திங்களில் பெங்களூரில் நடைபெற விருக்கிறது எனக் குழுவின் செயலாளர், திருவாளர் அ. கி. பரந்தாமனர் அறிவிக்கின்றார்.

கருத்தரங்கு

இந்தியால் தமிழுக்குக் கேடு?

(சா. வி. இராசேந்திரநாசன். தேனி.)

1937ஆம் ஆண்டில் தமிழ்ப் பெரியார் மறைமலை அடிகள், பரிதிமாற் கலைஞர் திரு. வி. க, பசுமலை பாரதியார் ஆகிய தமிழ்ப் பெருமக்கள் துவக்கிய தனித்தமிழ் இயக்கத்தின் மணம், தமிழகத்து மூலை முடுக்குகளில் உள்ளவர்களையெல்லாம் மொழியுணர்வு மிக்கவர்களாய் எழுச்சிபெறச்செய்து தமிழ்மொழிக்கு மறுமலர்ச்சி அளித்தது. அன்று தொட்டு இந்திமொழி இந்நாட்டை ஆளத் தகுதியற்றது என மொழித் துறை அறிஞர் பலர் தம் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி வந்துள்ளனர்.

நாடோறும் நல்ல தமிழ் வழங்கும் நாட்டம் உடையவராய்த் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் நண்பர் திரு. பாரதம். எம். சி. லிங்கம் அவர்கள் 'குறள்நெறி' ஆசிரியரின் முன்னர் ஏழு வினாக்களை வைத்து அவற்றிற்குத் தக்க விடை வேண்டுமெனவும் விருப்பந் தெரிவித்துள்ளார். அவையனைத்தையும் உற்று நோக்கின் அவை ஒரே ஒரு மையக் கருத்தினை வலியுறுத்துவதாகக் காண்கிறோம். அதுதான் இந்தியஒற்றுமை. இந்திய ஒற்றுமைக்காக இந்தி மொழியினை ஏற்கவேண்டும் என்றஎண்ணம் அவரது வினாக்களில் ஊடாடுகின்றது. இந்திய ஒற்றுமைக்காக இந்தியை ஏற்க நம்மை வேண்டுகிற அரசினர் தமிழுக்கும் பாதகம் விளைக்கும் நிலையினை உருவாக்குகின்றார்கள் என்பதனை வினாத் தொடுத்த நண்பருக்கு முதற்கண் எடுத்துக்கூறி அவரது வினாக்களுக்கு விடையிறுக்க விழைகிறேன்.

1. இந்தியால் தமிழ் எந்த வகையில் அழிந்தது? அழிகிறது? அழியும்?

இவ்வினாவிற்கு விடையளிக்கப் புகுங்கால் வேற்றுமொழியாளரின் ஆட்சி இந்நாட்டில் ஓங்கியிருந்த நேரங்களில் அவர்தம் மொழிகளால் நந்தமிழ்மொழி சிதைவுற்று. எண்ணற்ற சொற்கள் வழக்கினின்று நீங்கியநிலையினை எடுத்துக்காட்டாகக் கூறவிரும்புகின்றேன்.

முன்னாளில் இத்தமிழ் நிலத்தில் முடிபுனைந்தாண்ட மூவேந்தரின் கட்பினைப்பெற்று அவர்களோடு கலந்துரையாடி, தம்மொழி தெய்வீக மொழி என்று வடமொழியாளர் வடமொழியினை அறிமுகம் செய்வித்து, அவர் தம்கலையினையும் நாகரிகத்தையும் நம் தமிழோடு கலப்புறச் செய்து, இறைவன் உறையும் திருக்கோவிலின்பால் வழிபாட்டிற்குரிய மொழியாக வடமொழியினை ஆக்கி வைத்துள்ளனர். நெஞ்சம் நெக்குருகிப் பாடவல்ல தேவாரத்திருவாசகங்களெல்லாம் வடமறைக்குப் பின்னிற்கும் நிலையினை ஏற்றன. திருமண நேரத்தில் மணமக்களை இணைத்து வைக்கும் நிகழ்ச்சியில் தேனமுதத் தமிழுக்குப் பதிலாக வடமொழி இடம் பெற்றதை எவரும் மறக்க முடியாது

தமிழகத்தின் பல்வேறு ஊர்களின் பெயர்கள் வடமொழிப்பெயர்களாக மாற்றம் செய்யப்பட்டன. காட்டாக, திருமறைக்காடு - வேதாரண்யம் என்றும், முதுகுன்றம் - விருத்தாசலம் என்றும் மாற்றப்பட்டதனைக் குறிப்பிடலாம். எனவே வடமொழியின் கிளைமொழியான இந்தி இங்கு நுழைவதால் இடையூறுகள் வராதென இயம்புவதெவ்வாறு?

ஆங்கில ஆதிக்கத்தின்போது எண்ணற்ற தமிழ்ச்சொற்கள் வழக்கொழிந்திருக்கின்றன. அவற்றிற்குப் பதிலாக ஆங்கிலச்சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. நமது அன்றாட வாழ்க்கையின்போது புழக்கத்தில் ஆங்கிலச் சொற்கள் இரண்டறக் கலந்துள்ள நிலையினைத் தெளிவாக அறிகின்றோம். ஆனாலும் அவற்றை நீக்கி நல்ல தமிழ் வழங்கும் முறையினை நாம் இன்னமும் பெற்றோமில்லை.

இந்தியத் துணைக் கண்டத்துள் வேற்றுமொழியாளர் நுழைந்து ஆங்காங்கு உயர்நிலைபெற்ற போதெல்லாம் அவர்களின் மொழிச் சொற்கள் தமிழோடு கலந்து, தமிழிலிருந்து பிரித்தறிய இயலா நிலையினையும் ஏற்படுத்தியுள்ளன, கால் அதர் இருக்கவேண்டிய இடத்தில் ஜன்னல் இருக்கிறது. தண்டல் செய்தவனை விடுதது வசூல் செய்கிறோம். கைச்சாற்றுக்குப் பதிலாக ரசீது கொடுக்கிறோம் திறவுகோலினை விட்டுவிட்டுச்சாவியைக்கைக் கொள்கின்றோம்.

தமிழ்மொழி வழங்கும் மாநிலம் குன்றியதற்கும் பிறமொழிக் கலப்பே காரணம். அம்மொழிகளுட் குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தியின் தாய்மொழியான வடமொழிக்கே பெரும்பங்குண்டென்றால் மிகையாகாது. நல்ல தமிழ் வழங்கிய நிலமனைத்தும் ஆந்திரமாகவுங் கர்நாடகமாகவுங் கேரளமாகவும் மாறியதனை எவரேனும் மறுப்பரோ? எனவேதான் பிறமொழிக் கலப்பால் தமிழுக்கேற்பட்ட வடுவினை நீக்க முயன்று கொண்டிருக்கும் நேரத்தில் இந்தியின் மூலமாக இன்னொரு களங்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளாமல் முன் காக்கும் முறையினைக் கடைப்பிடிக்கவேண்டியவர்களாயுள்ளோம்.

2. நம் நாட்டில் உள்ள மாநிலங்களின் தொடர்பிற்கு உரிய மொழி இந்தி என்பதனை ஒப்புக் கொள்கின்றீர்களா?

மாநிலங்களின் தொடர்பிற்கு ஒரு பொது மொழி வேண்டும் என்பதனை ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் அது இந்தியாக இருக்கவேண்டுமென்பதனை வன்மையாக மறுக்கிறேன். ஏறத்தாழஎண்பது உட்பிரிவுகளைக் கொண்டதும், இந்தியத் துணைக் கண்டத்து மக்களில் நூற்றுக்கு நாற்பத்திரண்டு விழுக்காடுள்ள நான்கு மாநிலங்களைச் சார்ந்த மக்களால் வழங்கப்படுவதுமான இந்தி மொழி மாநிலங்களின் தொடர்பிற்குத் தேவையில்லை என்று திட்டவட்டமாக உரைக்க விரும்புகின்றேன். முடியாட்சியின் கீழ் இந்தியத் துணைக்கண்டம் இருந்த காலத்தில் ஆங்கிலம் தொடர்பு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருந்தது. இன்றும் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்து மக்களை இணைத்த பெருமை அதற்கு மிகவுண்டு, இந்தியைக் காட்டிலும் குறைந்த எழுத்துக்களால் இயங்குவதாலும் எண்ணற்ற இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு அறிவியற் றுறையில் உலகப் பெரு மொழிகளுள் ஒன்றாக அது வழங்கப் பெறுவதாலும் மாநிலத் தொடர்பு மொழியாக ஆங்கில மொழியைக் கைக்கொள்ளல் தவறன்று.

3. தமிழ்நாட்டில் இதுவரை எந்தெந்த இடங்களில் இந்தி புகுந்துள்ளது? அதனால் தனிமனிதவாழ்வு யாருக்காவது பாதிக்கப்பட்டுள்ளதா?

அஞ்சற்றுறையின் எல்லாப்பிரிவுகளிலும் இந்தியின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. நாணயங்களால்இந்திக்கே முதலிடம் அளிக்கப் பட்டிருப்பதோடு அந்நாணயங்களின் பெயர்களும் இந்திமொழியாலேயே அழைக்கப்படுகின்றன. (எ-டு நயா பைசா நயே பைசே) புகைவண்டிக் கட்டணச் சீட்டுக்களில் இந்தி இடம் பெற்றுள்ளது. மைய அரசினரின் அலுவலகங்கள் அனைத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் வலுவாக இந்தி திணிக்கப்பட்டு வருகிறது. பள்ளிகளில் இந்தி புகுத்தப் பட்டுள்ளது. அரசியல் மேடைகளிற் பேசும் பொழுது இந்தியை மாணவர்கள் விருப்ப பாடமாக ஏற்றுக் கொள்ளலாம் என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால் அதே சமயத்தில் மாணவர்கள் கட்டாயமாக இந்தித் தேர்வு எழுத வேண்டுமென்று சட்டங் கொணர்ந்து ஆணை பிறப்பிக்கின்றனர். ஆட்சியாளர்களுக்கும் பிற அரசியல் கட்சியினருக்குமிடையே மாணவமணிகள் பகடைக்காய்களாக ஆட்டிவைக்கப்படுகிறார்கள் என்றால்அது அரசினரின் திட்டவட்டமில்லாத மொழிக் கொள்கையின் கோளாறேயன்றி வேறெதுவாக இருக்க முடியும்.

தனி மனித வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறதா என்னும் விடைக்கு அண்மையில் திருச்சியில் தீக்குளித்து மாண்ட சின்னச்சாமி என்னும் மொழியுணர்வுக்காளையின் தியாகத்தைச் சுட்டிக் காட்டுவேன்.

4. இந்தி மொழியால் எங்காவது ஓரிடத்தில் தமிழ் மொழி மறைந்திருக்கிறதா?

கோடைக்கானல் குன்றுகளை நோக்கி அடிவாரத்திலிருந்து ஐந்து அல்

(அடுத்த பக்கம் பார்க்க)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது ஆறுகல் தொலைவு சென்றவுடன் அரசினரால் அமைக்கப்பட்ட பூங்கா ஒன்றினைக் காணலாம். அந்த இடம் பெருங்கற்பாறைகள் மிகுந்த இடம். அவ்விடத்திலிருந்து இயற்கைக் காட்சிகளின் எழிலைக்கண்டு மகிழலாம். அவ்விடத்தின் பழைய பெயர் மயிலாடும் பாறை. மாலை வேளைகளில் மாரிகண்டு தோகை விரித்தாடும் மஞ்ஞைக் கூட்டம் கூடிக் கலைந்தமையான் ஏற்பட்ட பெயர் அது. ஆனால் அவ்விடத்தில் தற்போது பூங்கா அமைத்துள்ள அரசினர் "பர்வத் விஹார்" என்ற பெயரினைச் சூட்டியிருக்கின்றனர். இந்திப் பெயர் சூட்டித் தமிழழிக்கும் முயற்சிகளுள் இதுவும் ஒன்றென்றால் மிகையாகாது. வினாத் தொடுத்த நண்பர் நேரிற் சென்று நிலையினை அறியுமாறு வேண்டுகிறேன்

5. பிறமொழிகளைக் கற்பதால்தான் ஒருவனின் தாய்மொழி உலகப் புகழ் பெறமுடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறீர்களா? இந்த வகையில்தான் தமிழால் ஆகிய திருக்குறள் இன்று உலகப் புகழ் கொண்டுள்ளது என்பதை மறைக்க இயலுமா?

பிறமொழிகளைக் கற்பதால் ஒருவனின் தாய்மொழி உலகப் புகழ் பெறமுடியும் என்ற கருத்தினை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்த செயல் இந்தியினை ஆட்சி மொழியாகவும் மாநிலத் தொடர்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்வதால்மட்டுமே ஆகுமென்றால் அதனை மறுக்கிறேன். திருக்குறள் உலகப்புகழ் எய்தியதன் காரணம் பிறமொழி கற்றதால் தானேயன்றி பிறமொழியினை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்வதால் அன்று. எனவே இந்தி மொழியைக் கற்றுக்கொள்வதைப்பற்றிக் குறையேதுங் கூற நான் விரும்பவில்லை. ஆனால் அது ஆட்சி மொழியாக திணிக்கப்படுவதனையே வெறுக்கிறேன்.

6. மொத்தத்தில் இந்தியால் நம் தமிழ் கிஞ்சித்துஞ் சிதைவுறாது என்று பசுமரத்தாணிபோல என் மனதில் பதிகிறது! இதில் உங்கள் மனச்சாட்சி என்ன?

இந்தியால் தமிழ் அழியாது என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் சிதைவுறாது என்னும் கூற்றை மறுக்கிறேன். தமிழர் தம் வீர விளையாட்டுக்களுள் ஒன்றான 'சடுகுடு' விளையாட்டை இந்திமொழிச்சொல்லான 'கபடி' என்ற சொல்லை இட்டு அழைக்குமாறு அரசினர் ஆணை ஒன்றிருப்பதும், பள்ளி மாணவர்கள் அதனைக் 'கபடி' என்றழைக்க வேண்டுமென்பதும், உடற்பயிற்சி ஆசிரியர்கள் தமது திங்களறிக்கை, பாடக் குறிப்புக்கள் போன்றவற்றுள் கபடி என்னும் பெயராலேயே அவ்விளையாட்டினைக் குறிப்பிட வேண்டுமென்பதும் விதிமுறைகளாக்கப்பட்டிருப்பதை வினாத் தொடுத்த நண்பருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தில் விளைந்த பொருட்களைக் கொண்டு தமிழகத்தில் செய்யப்படும் பல பொருட்களுக்கு (எ-டு. உணவு விடுதி, சிற்றுண்டி, இனிப்புப் பொருட்கள்) இந்திப்பெயர்கள் சூட்டப்படும் வழக்கினை நகரங்களில் எங்கும் காணமுடிகின்றதே! ஒலி இயல் முறையில் மிக மிக நுண்மை வாய்ந்த தமிழை அழிக்க இயலாது என்றாலும் இந்திமொழிச்சொற்களை கலந்து சிதைவினை உண்டுபண்ண முடியும். அறவழி வாழ்க்கையில் நின்றொழுகவும், ஆட்சிமுறையினை நடத்தவும், வினைசெயல் வகையினை விரைந்தாற்றி வெற்றி பெறவும் வழிகாட்டக்கூடிய ஒப்பரிய கருத்துக் களஞ்சியங்களாகத் திகழும் இலக்கிய நூற்களைத் தன்னகத்தே கொண்ட உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழிருக்க, எவ்வகையிலும் ஒப்பிட்டுக் கூறத் தகுதியற்ற இந்தி மொழி ஆட்சிப்பீடத்தில் அமரக் கருதுவது நம்மால் புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அன்னை மொழியாம் அமுதத் தமிழ் மொழி ஆட்சிக்கோலேந்தி அரியணையில் வீற்றிருக்க வேண்டிய நிலையினை முழுமையாகப் பெற்ற பின்னர் நட்பு மொழியாக இந்தி இங்கு நடமாட வந்தால் நமக்கேதும் நட்டம் ஏற்படும் நிலை வாய்க்காது. விருந்தினரை வரவேற்பதைப்போலவரவேற்கலாம் ஆனால் நிலையாக நம் நிலத்தில் தங்கி அன்னையின் அரியணையையும் ஆட்சிக் கோலையும் கவர்ந்திட ஒருப்படோம்.

7. இறுதியாகத் தாங்களும் இன்னும் சிலரும் வேண்டாத இந்த மொழி விடயத்தில் இறங்கி இந்தி—தமிழ் எனப் பிரித்துப் பேசுவதால் அது ஒருசில கட்சிகளுக்கு வளர்ச்சியாகவும் நம் இந்திய நேசத்தின் பற்றிலிருந்து ஒரு சிலரை வெளியேற்றுவதாகவும் அமைகிறது என்பதை உணருகிறீர்களா?

இந்திமொழி வலுவில் திணிக்கப்படுவதாலேயே இந்தி - தமிழ் என்று பிரித்துப் பேசும் நிலை ஏற்படுகிறது இலக்கணமும், இலக்கியமும், சொல் வளமும் நிரம்பிய தமிழ் மொழிக்கு உரிமையுடையவர்களாய் நாம் இருப்பதால்தான் இந்தியின் தகுதிபற்றி எடைபோட முடிகிறது இந்தி மொழி வழங்கப்படும் நிலப்பகுதியும் பேசும்மக்கள் தொகையினையும்விடக் கூடுதலாக இருக்கலாம். ஆனால் அந்த ஒரே ஒரு தகுதியும் இந்தி மொழியின் உட்பிரிவுகளை நோக்குமிடத்து எவ்விதத்திலும் தகுதியற்றது என்றகருத்தினைத் தெளிவாக்குகிறது. இந்திய தேசத்தின் பற்றிலிருந்து ஒரு சிலரை வெளியேற்றுவதாக அமையும் நிலை அம்மொழிக்கு உண்டாகிறதென்று தெரிவதால் அம்மொழியின்மீது அரசினர் கொண்டுள்ள கருத்தினை மாற்றிக் கொள்ளலாமே!

அம்மொழியின் நுழைவால் சில அரசியற் கட்சிகளுக்கு வளர்ச்சியும் ஆட்சியாளர்களுக்கு தலைக் குனிவும் ஏற்படுகிறது என்பதை ஒப்புக்கொண்டால் அம்மொழியை நீக்குவதன் மூலம் அந்த வளர்ச்சியைக் குன்றச் செய்து ஆட்சியாளர் நிமிர்ந்து நடக்கலாமே!

ஆங்கிலத்திற்கு ஆட்சிப் பீடத்திலுள்ள இணைமொழித் தகுதியை நீக்க என்ன காரணம் கூறப்படுகிறதோ அதே காரணத்தை நான் இந்தியின் மீது சாட்ட விரும்புகிறேன். ஆங்கிலம் நமக்கு அந்நிய மொழி-அது அடிமை வாழ்வின் அடையாளச் சின்னம் என்ற காரணத்தைத் தானே கூறமுடியும்? இந்தியற்ற பிறமொழியினைத் தாய் மொழியாகக் கொண்டவர்கட்கு இந்தியும் அந்நிய மொழிதான். ஆறாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள நாட்டவரின் மொழியான ஆங்கிலம் அந்நிய மொழி என்றால் ஈராயிரம் மைல்களுக்கப்பால் உள்ளவர்களின் மொழியான இந்தி நமக்கு அந்நிய மொழி என்பதில் தவறேதுமுண்டோ?

மாநிலத் தொடர்பு மொழியாகவும் மாநில ஆட்சிப் பீடங்களில் இணை மொழியாகவுஞ் செயல்பட இந்தியைக் காட்டிலும் ஆங்கிலம் எவ்வகைத் தகுதி குன்றிய மொழியன்று. இந்தி ஆட்சி மொழியாயும் ஆங்கிலம் இணை மொழியாகவும் இருக்கும் பொழுது இந்தி பேசும் மாநிலத்தவர் இருமொழிகளையும் பிறமாநிலத்தவர் மூன்று மொழிகளையும் கற்க வேண்டியுள்ளது.

ஐரோப்பிய நாட்டில் உள்ள பெரும்பான்மையான மொழிகட்கு ஒரே வகையான எழுத்துரு உள்ளது. அதுபோல இந்தியத் துணைக்கண்டத்தின் கண்ணுள்ள, எல்லா மொழிகட்கும் தேவநாகரி எழுத்து வரிவடிவத்தினைப் பயன்படுத்தவேண்டுமென வடக்கேயுள்ள இந்தி மொழிப்பற்றுளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இக்கருத்து பொருளற்றவாதத்தை எழுப்பப் பயன்படுகிறதேயன்றித் துணைக்கண்டத்து ஒற்றுமைக்குக் கிஞ்சித்தும் பயன் நல்குவதாய் அமையவில்லை.

இறுதியாக,...

தமிழகம் என்னும் வயற் பரப்பில் விளைந்து வளங்கொழித்து நிற்கும் செந்தமிழ்ப் பயிரை இந்தி மொழி என்னும் வெள்ளாடு அசைபோட வருகிறது. அதனைத் தடுக்கும்வேலியாகத் தமிழ்க் காப்புக் கழகம்இயங்கி வருகிறதேயன்றி எங்கோ வழங்க வேண்டியஇந்தியினைஒழிக்கும் இயக்கமன்றுஇது என்று வினாத் தொடுத்த நண்பருக்கு விடையிறுக்க விரும்புகின்றேன்.

செந்தமிழின் வாழ்வும் வளமுஞ் சிதையாதிருக்கத் தமிழ்க் காப்புக்கழகம் என்னும் வேலி வேண்டும் அந்த வேலியில் ஓர் உறுப்பாக நண்பர் திரு. பாரதம் எம். சி. லிங்கம் அவர்களைப்பங்கேற்க வருமாறு அன்பழைப்பு விடுக்கிறேன்.

(15—2—64 இதழின் தொடர்ச்சி)

வள்ளுவரும் அரசியலும்

முதலிலே அவனுக்கு, அரசுக்கு வேண்டிய அங்கங்களான படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பவை ஆறும்நன்றாக அமைதல் வேண்டும். ஈகை வேண்டும்; அறிவு வேண்டும்: ஊக்கம் வேண்டும்; செயல்களில் விரைவுடைமை வேண்டும்; தூங்காமை ஆகாது; துணிவு வேண்டும்; கல்வி வேண்டும்; அறன் வழி நிற்றல் வேண்டும். அறனல்லவற்றைக் கடியும் வீரம்வேண்டும். பொருள் வளம் மிகுக்கும் அறிவும் கோட்பாடும் வேண்டும். காட்சிக்கெளியனாதல் வேண்டும். கடுஞ்சொல் அல்லாதவனாதல் வேண்டும்; இன்சொல் வழங்கி ஈத்தளிக்கும் இயல்பினனாதல் வேண்டும், செங்கோல் வழுவாத நெறியுடையவனாதல் வேண்டும் தன்பால் குற்றங்களைக்கண்டு கடிந்தார் மேல் வஞ்சம் கொள்ளாது பொறுக்கும் பண்புடையனாதல் வேண்டும். கொடையிற் சிறந்தவனாய், யாவர்க்கும் முகமலர்ந்து அன்பு செய்கின்றவனாய், நெறியில் தவறாதவனாய், ஏழை மக்களுக்குக்கொழு கொம்பாய் அமைகின்றவனாய் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் நல்லாட்சிக்கு வேண்டும் நற்பண்புகளையெல்லாம் முதல் அதிகாரமான இறைமாட்சியிலேயேதொகுத்துக் கூறி விட்டுப் பின்னே ஒவ்வொன்றையும் விளக்கப் புகுகின்றார், ஆறு அங்கங்களின் இயல்புகளை விரிக்கத் தனியாக அங்க இயலை வகுத்துக் கொள்கிறார். அவற்றுள் அடங்காதவையாகிய சில இயல்புகளுக்காக ஒழிபியலை வகுத்துக்கொள்கிறார். ஆனால் அவற்றைச்சொல்லு முன்னே அரசியல் தலைவனுக்கு வேண்டும் விரிவான பண்புகளை உடனேயே சொல்லிக் கொள்கிறார். தொகுத்துரைத்த இறைமாட்சியின் பின்வரும் இருபத்து நான்கு அதிகாரங்களும் தலைவனுக்கு இன்றியமையாத பண்புகளை விரித்துரைப்பனவாகவே இருக்கின்றன. தொகுத்துரைக்கும் வரையில் செய்யுள் நெறிக்கேற்ப முறைபிறழ வைத்ததைப் பின்னே விரித்துரைக்கையில் நிரல்பட வைத்துப்பேசுகிறார்.

கல்வி

அவ்வாறு பேசுங்கால் முதலில் கல்வியை எடுத்தோதுகின்றார். ஏனெனில் நல்ல தலைவனாதற்கு எண்ணும் எழுத்தும் கண்போன்றனவாகும். கல்வியில்லாத அரசியல் தலைவன் முகத்திலே இரண்டு புண்ணுடையயவனேயாவன். அவன் கல்லாதவனாயின் எல்லாம் இருந்தும் இல்லாதவனே; கல்வியே அவனுக்கு அழியாத் திரு; அறிவு ஊற்று; புகழ் விரியும் மையம்; இன்பம் பரப்பும் எழில் ஞாயிறு.

கல்லாமை:

கல்லாத அரசியல் தலைவன் அரங்கின்றி வட்டாடுகின்றான் குறிக்கோளில்லாது செயல் படுகின்றான். அவன் நல்லார் அவையில் பேச விரும்புவது பயனற்ற முயற்சி. அவன் சொற்கள் வெற்று வேட்டாக அமையும். நகைப்புக்கு இடம். அதைவிடச் சொல்லாதிருப்பதே மேல்; அவன் கருத்து ஒருகால் நன்றாக அமையினுங்கூட அறிவுடையார் அதனைக் கொள்ளார். அவர் முன்னே அவன் சோர்ந்து விடுவான். அவன் மண் பாவையாகவே, விலங்குக்கு ஒப்பாகவே, கீழ்மகனாகவே கருதப்படுவான். ஏதோ இருக்கிறான் என்பதே அல்லாது மற்று அவன் பூமிக்கு நச்சுப்பயிர் போலவே ஆவான்.

கேள்வி

அவ்வாறு யாதானும் ஊழ் வயத்தால், அவன் கல்வி பெறத்தவறிவிட்டானாயினும் கேள்வியிலாவது அரசியல் தலைவன் சிறந்துபட முயலல் வேண்டும். அங்ஙனமாயின் அது தளர்வெய்தியக்கால். தவறுங்கால் துணை நிற்கும் ஊன்றுகோல் போலாயினும் உதவலாகும். சொல்லிலே வணக்கம் பிறக்கும்; செயலிலே பெருமை உண்டாகும்; பேதைமையால் பிதற்றுதல் செய்யான்.

அறிவு

இந்தக் கல்வி கேள்விகளோடு நல்லறிவு படைத்தவனாகவும் அரசியல் தலைவன் இருத்தல் வேண்டும். அறிவு என்பது என்ன? அதற்கு ஒரு பொருளல்ல வள்ளுவர் கொள்வது.

டாக்டர் பா. நடராசன்
எம்.ஏ., டி.லிட்., எம்.எல்.ஏ.,

முதலில் அறத்தில் நிற்பது அறிவு என்கின்றார். 'நன்றின்பால் உய்ப்பதறிவு'. பின்னே ஆராயுந்திறன் அறிவு எனப்படும். எப்பொருள்யார் யார் வாய்க்கேட்பினும்அதன் மெய்ப்பொருளை ஆய்ந்து காணும் ஆற்றல் அறிவு. எளிய முறையில் தான் சொல்லி, பிறரது அரிய கருத்துக்களை அறியும் ஆற்றல் அறிவாகும் உயர்ந்தோர் கருத்தைத் தழுவி நடப்பது அறிவு. எதிரதாக வருவதைத் தெரியும் ஆற்றல் அறிவு. அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவதும். அஞ்சவேண்டாதவற்றுக்கு அஞ்சா திருத்தலும் அறிவு.

குற்றம் கடிதல்

அடுத்து, சில குற்றங்கள் தன்னை அடையாது, அரசியல் தலைவன் கற்றுக்கொள்ளவேண்டும். அதிகாரத்தால் சருக்கு எழுவதுஇயல்பு அதை முதலில் விலக்கிக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறேசினமும்சிறுமைஎனப்படும் அளவிறந்த காமமும், வேண்டும் வழிப்பொருள் வழங்காத இவறலும் குற்றமேயாகும் எப்படியும் கருதியது முடித்துவிடல் என்ற பிடிவாதம் ஒரு குற்றம். எப்பொருள் மாட்டும் கட்டு மீறிய விருப்பம் பிறிதொரு குற்றமாகும். தன் குற்றம் காணாது பிறர் குற்றமே காணுதல் பெருங்குற்றம் தன்னையே வியந்து கொள்ளுதலும் பயனற்ற குற்றமாகும்.

பெரியாரைத் துணைக்கோடல்
சிற்றினம் சேராமை

ஆட்சி அதிகாரம், பருகப் பருகத் தலைக்கேறும் கள் போன்றது. எனவே அரசியல் தலைவனை இடித்துரைப்பார் வேண்டும். அங்ஙனம் இடித்துரைக்கும் பெரியாரை அவனும் விரும்பித் துணைக் கொள்ளல் வேண்டும். நல்லோர் துணைக் கொள்வதோடு, தன்னைப் புகழ்ந்து இச்சகம் பேசிச் சூழ விரும்பும் சிறியோர் இனத்தை ஒதுக்கவும் வேண்டும்,

தெரிந்து செயல் வகை

பின்னே ஆராய்ந்து செயல்படல் முக்கியமாகும். முற்றவெண்ணி வரும் விளைவுகளை நன்கு அளந்து பின்னர் எதனையும் தொடங்கல் வேண்டும். தெளிவு இல்லாத வினைகளில் ஈடுபடலாகாது. செய்யவேண்டியனவற்றைச் செய்தே முடிக்கவும் செய்யத்தகாதனவற்றைச் செய்யாதுவிடவும் வேண்டிய உறுதிப்பாடு இருத்தல் வேண்டும். அவரவர் பண்பறிந்து அதற்கேற்பச் செயல்படல் வேண்டும். உலகம் ஒப்புகின்ற முறையில் செயல்களை வகுத்தல் வேண்டும்.

வலியறிதல்

தன் வலிமையை அறிந்து கொண்டு அதற்கேற்பவே செயல்பட வேண்டும் அதிகாரம் கையிலுள்ளதென எண்ணி அதிகப்படச் சென்றுவிடலாகாது.

காலம் அறிதல்

காலமறிந்து செயல்பட வேண்டும். தற்காலமாகப்பின் வாங்குவது வெற்றிக்குத்துணைபுரியுமானால், பின் வாங்குவதற்கு அஞ்சலாகாது. காலம் வரும்வரை பகைவனைச்சுமக்க வேண்டுமானாலும் சுமக்கத்தான் வேண்டும்.

இடனறிதல்

அதுபோலவே இடனறிந்து செயல் பட வேண்டும். ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு இடத்தில் வலிமை சிறப்பாக உண்டு யானைக்கு நிலத்தில் வலிமை; முதலைக்கு நீரில்வலிமை. இவற்றைத் தெரிந்து கொண்டு அரசியல்த் தலைவன் செயலில் இறங்க வேண்டும்.

தெரிந்து தெளிதல்

தக்காரை ஆராய்ந்து தெளிந்து தேர்ந்து கொள்ள வேண்டும். குற்றம் செய்யாதவரில்லை: எனவே குணமும் குற்றமும் சீர்தூக்கி, குணமிக்காரைத் துணையாகக் கொள்ள வேண்டும்; தெளிந்து தேர்ந்து கொள்ளல் வேண்டும், தேர்ந்தபின் ஐயுறவு கொள்ளலும் ஆகாது.

(தொடரும்)

உலகத்தின் பாதை..

கடலரசன்

உலகத்தின் பாதை அரசியல் வழியாகப் பல வகைகளைப்பெற்றிருக்கிறது. அமளிகளைத்தடுக்கும் அறங்கூறும்அவை செல்வத் திருநாடு அமெரிக்காவிலே இருப்பதால் அங்கிருந்தே முக்கிய செய்திகள் நம் இதயத்தைக் கவருகின்றன. அவனியைப் பாதிக்கும் எல்லாக் குறைபாடுகளுக்கும் பொது மன்றம் பொறுப்பேற்றுள்ளது. இரண்டாவது உலகப்போர் முடிந்து இருபதாண்டுகள் ஆனாலும் அரசியல் அமளிகள் குறையவில்லை. காங்கோ முதல் காசுமீரச் சிக்கல் முடிய ஏதாவது ஒரு பகுதி கண்காணிப்புக்குரியதாக இருக்கிறது. நானிலமெங்கும் பரவியுள்ள நாடுகளின் திசைவழிகள் இருகூறாகிவிட்டன. அமெரிக்கச்சார்பு, உருசியச்சார்பு என்ற இரு அணிகளுடன் இப்போது மூன்றாவது செஞ்சீன அணியும் உருவாகியுள்ளது. முதல் அணியைவிட மூன்றாவது அணியைச்சமாளிப்பது இரண்டாவது அணியினரான உருசியத் தலைவர்களுக்குக் கடமையாக உள்ளது. ஆதிக்க வெறியில் சமநிலை பெற்றுள்ள அமெரிக்காவும் சோவியத்தும்களத்திலேசந்திக்கும் வாய்ப்புகள் பலமுறை இடைவெளியைக்குறைத்து நெருக்கம் பெற்றபோதும் ஒருவருக்கொருவர் தம்மைத்தாமேஉணர்ந்து விலகியதால் வேறுநாடுகள் அலையென எழவில்லை—அகிலத்துமக்கள்மறந்துவிடவில்லை! பாரிசு போன்ற சமாதானமாநாடுகள் முறிவுற்றபோதெல்லாம் உலகம் அதிகார வெறி உணர்வை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்து இருப்பினும் கொல்லப்பட்ட 'கென்னடியும் சோவியத் தலைவர் குருசேவும் குன்றென உயர்ந்து சூழ்நிலைத் தணித்தனர். இருபெரும் வல்லரசுகள் இதயம் ஒன்றியதைத் தாற்காலிகமாகக் கூட ஒப்புக்கொள்ளாதவர்கள் செஞ்சீனத் தலைவர்கள்.

அமெரிக்க வல்லரசை எதிர்த்தே வளர்ந்து இன்னும் வன்மையும் வளமையும் பெற்றுள்ள கியூபா-அதன் தலைவர் டாக்டர் பிடல்காசிடிரோ முக்கிய கருப்பொருளான செய்தியை எவரும் மறந்திருக்கமுடியாது. அமெரிக்கக்கடற்படையினரை எதிர்க்கக் கிராமிய சோவியத்தின் அணிகள் திரும்ப அழைக்கப்பட்டன. சௌன்லாய் போன்ற சீனத் தலைவர்கள் மாசுகோ அரசின் பின்வாங்குதல் தவறென்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான பரந்த கடல் வெளிக் குருதிவண்ணம் பூசப்படவேண்டும் என்று விரும்பினர். அலைகடல் உயிர்த்ததுபோல அமைதி பெற்றது கியூபா! இன்னும் சோவியத் நாட்டில் நட்புச்சுற்றுலாவில் இருக்கிறார் காசிடிரோ! ஆனால் கவனம் முழுவதும் தாயகத்தின் பெருமைகளை உயர்த்துவதில்தான். கியூபாவைப் போலவே இன்னொரு தீவுதான் சைபிரசு! அதன் தலைவர் மப்பிற்குரிய மகாரியசு பாதிரியார். அவரது அயராத பணி தனி நாட்டினைப் பெற்றுத் தந்தது. ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட்டவர்கள் தங்கள் தனி அரசின் பெருமைகளைத் தரணிக்குச் சொல்லியபோது விடுதலை வாழ்வினை விரும்பும் அடிமைப்பட்ட மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர் - வரவேற்றனர் - வாழ்த்தினர்! ஆனால் இன்றோ துருக்கி மக்கள் கிரேக்க மக்களால் தாழ்த்தப்பட்டுவிட்டனர் என்ற உரிமைக்குரல் புயலெனக் கிளர்ந்துள்ளது. சைப்ரசு தீவு நோக்கி துருக்கியப்படை புறப்பட்டுவிட்டது. விடுதலையை விரும்பிப்பெற்ற மகாரியசு பாதிரியார் விழியிலே நீர்வழிய உலக மன்றத்தின் உதவிப்படையின் பொறுப்பிலே சைபிரசு மக்களை ஒப்படைக்கத் தயாரென அறிவித்துவிட்டார்! அன்பும் அறமும் பண்பும் பாசமும்பாழ்பட்ட ஓவியங்களாகிவிட்டன.

உலகத்தின் பாதை யெங்கும் உரிமைப் போராட்டம் நிறைவதுபோலத்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் காசுமீர் தகராறு இன்றுவரை தீரவில்லை. பதினைந்து ஆண்டுகட்குப்பின் இப்போதும் பாகித்தான்—இந்தியா இரு நாடுகளும் உலக மன்றத்தில் உரக்கவாதிட்டன! முன்னாள் நீதிபதி சக்ளாவும்-பாகித்தான் பூட்டோவும் திரும்பத் திரும்பக் குற்றம் சாற்றிக்கொண்டபிறகு மன்றம் எந்தவிதத் தீர்மானமும் நிறைவேற்றமுடியாமல் கலைந்து விட்டது. காசுமீரில் நபிநாயகம் அவர்களின் திருமுடி களவாடப்பட்ட காரணத்தால் கிழக்குப்பாகித்தான் போர்க்களமாகிவிட்டது. குருதிவெள்ளத்திலேவங்கத்து மண் சிவப்பாகிவிட்டது! இந்த வேளையில் பாகித்தான் அதிபர் அயூப்கான், இந்தியாவையும் பிரதமர் நேருவையும் தமது முதல் எதிரியென அறிவித்திருக்கும் சீனப்பிரதமர் சௌன்லாயை விருந்தினராக வரவேற்றுள்ளார்! எல்லைத் தொல்லைகள் தொடரும்என்பதற்கு இருவரின்சந்திப்புச்சான்றாக அமைகிறது. இந்தியப் பாராளுமன்றத்தில் காசுமீர்—கல்கத்தா கலகம் இவைகளுடன் சௌன்லாய் வருகையும் விவாதிக்கப்படுகிறது. பஞ்சாப் கெய்ரோன்- கேரளத்துச் சாக்கோ, சங்கர் - ஆந்திரத்துச் சஞ்சீவரெட்டி—இப்படி அமைச்சர்களாகஇருக்கும் சில தனி மனிதர்களின் விருப்பு வெறுப்புகளால் எழுந்திருக்கும் சிக்கலைத் தீர்க்கவேண்டிய கட்டத்தில் இந்திய அரசு இருக்கிறது. குடியரசுத்தலைவர் உரை நிகழ்த்தமுடியாமல் உடல் நலக்குறைவு பெற்றதால் பாராளுமன்றத்தின் பெருமை குலைந்தது-பிரதமர் நேரு உடல் நோயுற்றதால் அமைச்சரவையே அவதிப்படுகிறது! அதனால்தான் அரசினரின் பெரும்பான்மையான கடமைகள் செயலற்றுவிட்டன. உலகத்தின் வழியில் உயர உயரச் செல்ல முடியாமல் தாழ்ந்தும் பணிந்தும் நிலையிறங்கித் தாயகம் தவிக்கிறது. உலகம் போற்றும் வகையில் தன் பாதையை-அரசியல் பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளத் தமிழகமக்கள் ஆயத்தமாதல்வேண்டும்.

திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழா.

இப்பொழுது நடைபெறுவது திருவள்ளுவரின் ஆண்டு **1995** ஆகும் இன்னும் ஐந்து ஆண்டுகள் கழிந்ததும் இரண்டாயிர ஆண்டு நிறைவுறுகின்றது. இவ்விரண்டாயிர ஆண்டு நிறைவை நாடெங்கும்—உலகெங்கும் தக்கமுறையில் கொண்டாடி வள்ளுவரின் சீர்த்தியை வையகமெங்கும் அறியச்செய்தல் தமிழ்மக்களின் தவிர்க்கலாகாக் கடனாகும். இவ்விழாவை எவ்விதம் கொண்டாடலாம் என்பதற்குரிய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன அறிவிக்க விரும்புவோர் "குறள் நெறி"க்கு எழுதுமாறு வேண்டப்படுகின்றனர்.

மொழித்திற முட்டறுத்தல்

பெரும்புலவர் ந. மு. கோவிந்தராய நாட்டார்,

கட்டிளங் கன்னியாய்க் காலம் கடந்துநின்றாய்
சொட்டும் அமிர்தத் துவர்வாயாய் — மட்டில்லா
மாட்சி யுடையாயிம் மாநிலத்தின் கட்டிலில்நீ
ஆட்சிசெய்வ தென்றோ அமர்ந்து.

மொழித்திற முட்டறுத்தல் என்னும் இத் தொடர், இயற்றமிழ்ச் செய்யுட்களில் முன்பின்னாகக் கிடக்கும் சொற்களைக்கொண்டுகூட்டி முறைப்படுத்தி இலக்கணவிதிகாட்டி விளங்க வைத்தல் எனப் பொருள்படும். ஈண்டெழுதப்படும்கட்டுரை இப்பொருள் குறித்ததன்று. மொழித்தோற்றம் பற்றியும். மொழி வகைபற்றியும் மொழி நூலறிஞர் கொண்டுள்ள கருத்துக்களில் சிலவற்றின் முட்டறுத்து எம் கருத்து விளக்குதலும், நாகரிக மக்களாற் பேசப்படும் மொழிகள் எல்லாவற்றிலும் தொன்மையதான தமிழ் இன்றும் குன்றா இளமையதாய் நிற்றற்கேதுவான அதன் மொழித்திறனை ஓராற்றான் தெளிவுறுத்தலும் இக்கட்டுரையின் பொருளாகும்.

2. மொழித் தோற்றம்

முதற்கண் மொழித் தோற்றம் பற்றிய மேனாட்டு மொழிநூலறிஞர் கொள்கைகளைச் சுருங்கவுரைத்தாராய்வாம். இவர்களிற் பலர் மக்கள் ஒரு காலத்தில் பேச முடியாத நிலையிலிருந்தே பேசும் நிலைமைக்கு வந்திருக்க வேண்டுமென்ற அடிப்படையில் மொழித் தோற்றம் பற்றி ஆராயத்தொடங்கினர். ஆகையின் முதலில் மக்கள் ஒருவர்க்கொருவர் கைக்குறி காட்டிக் (சைகை) கருத்தைத் தெரிவித்துக் கொண்டனர் என்றும் இதனடிப்படையிலேயே மொழி தோன்றியதென்றும் கொண்டனர். இருளிலும், கைகள் பிற அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் போதும் கைக்குறிகள் பயன்படாமையினால் இக்கொள்கை வலியுடைத்தன்றெனக் கைவிடப்பட்டது. சிலர், விலங்குகள், பறவைகள், இயற்கையொலிகள் (கடல் முழக்கம், அருவி வீழ்ச்சி, இடி) இவற்றின் பலதிறப்பட்ட ஓசை ஒலிகளைக் கேட்டு அவற்றைப் போல் ஒலித்து மக்கள் பேசத் தொடங்கியிருத்தல் வேண்டுமென்று கொண்டனர். இவ்வாறு தோன்றிய சொற்கள் பல மொழிகளிற் சிற்சில இருக்கின்றனவென்பது உண்மையே. தமிழில் உள்ள காகம், குயில், இடி, திடீர், பளீர், என்பன போன்ற சொற்கள் இவ்வகையிற் பிறந்தவையே. எனினும் ஒரு மொழியில் உள்ள சொற்களனைத்தும் இவ்வாறு தோன்றின வெனல் அமையாமையின் இக்கொள்கையும் கைவிடப்பட்டது. விருப்பு, வெறுப்பு, வெகுளி, மகிழ்ச்சி, அழுகை முதலிய உணர்ச்சிகளின் வெளிப்பாட்டால் மொழி தோன்றியிருத்தல் வேண்டுமென்று சிலர் கொண்டனர். இஃதும் கைவிடப்பட்டது. ஏனெனில் உணர்ச்சியால் தோன்றும் சொற்கள் மிக மிகச்சிலவே. தமிழில் உள்ள அந்தோ, ஐயோ, ஆ, ஓ, சீ முதலியன இவ்வாறு தோன்றியிருத்தல் சாலும். மற்றும் சிலர், மக்கள் உடலுழைப்பான கடுந்தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது களைதீர வாய் வழி வெளிக்கிளப்பும். ஆ, ஓ, ஏலே, ஏலேலோ, போன்ற ஒலிகளிலிருந்து மொழி பிறந்திருக்க வேண்டுமெனக் கொண்டனர். இஃதும் டோலிக் கொள்கையாய் முடிந்தது. ஏசுபர்சன் என்ற அறிஞர் முதற்காலத்து மக்கள் குழந்தைகளைப் போல் மழலை பேசினர் என்றும். மழலை இனிய பாட்டாக மாறியதென்றும், பாடல்களிலிருந்து மொழி தோன்றியதெனவும் கூறுவர். எல்லா மொழிகளிலும் பாட்டு உரை நடைக்கு முன்னர்த் தோன்றியிருத்தலால் இக்கொள்கை பொருத்தமானதென்று தமிழறிஞர் சிலர் கருதுகின்றனர் இனி இவற்றைக் குறித்து எம் கருத்தினைச் சில சொற்களில் விளக்குவாம்.

மக்கள் ஒரு காலத்தில் பேச முடியாத நிலையில் இருந்தனர் என்பது பொருத்தமான கொள்கையன்று. இக்காலத்தில் செவிட்டூமர்களாயிருப்போரே கைக்குறி காட்டிக் கருத்தறிவிக்கின்றனர் என்பது யாமெல்லாம் அறியுமுண்மையாம். ஆதி மக்கள் அறிவு வளம் பெறாத நிலையில் இருந்திருக்கலாம், ஆனால் பேசாத ஊமர்களாயிருந்தனர் என்பதனை ஒப்புதல் எவ்வாறு? விலங்குகளும் பறவைகளும் தத்தம் குரல்களாலும் பிறகுறிகளாலும் தம்மினங்களுடன் பேசும் போது ஆறறிவு படைத்த மக்கள் பேசா ஊமர்களாய்த் தோன்றினர் என்பது எவ்வாறு பொருந்தும்? மக்களின் பேச்சுக்கருவிகளாகிய இதழ், நா, பல், அண்ணம், மூக்கு குரல்வளை அமைந்திருக்கும் தன்மையை நோக்கின் அவை பேசுவதற்கென்றே அமைந்தவை என்பதனை அறியலாம். எனினும், ஆதிகால மக்கள் யாம் இப்பொழுது பேசுவது போல் சொல்வளம், பொருள் வளம் நிறைந்த மொழி பேசியிருத்தல் முடியாது என்பது வெளிப்படை, ஆதிகாலத்தமிழ் மக்களின் பேச்சுமொழி எவ்வாறு இருந்திருக்கக்கூடும் என்று ஆராயுமுன் பாட்டு மொழிக் கொள்கையைப் பற்றி ஒரு சொற் கூறுவாம். இதுவும் பொருந்தாக் கொள்கை என்பது எம் கருத்து. பேசுவதற்கு வேண்டிய பேச்சுக் கருவிகளின் முயற்சியைவிடப் பாடுவதற்கு வேண்டிய முயற்சி அதிகமாகும். சொற்களால் அமைந்ததே பாட்டு. பாட்டிலிருந்து சொற்கள் பிறந்தனவென்பது பொருந்தாதாகும்.

இனி, மொழித் தோற்றத்தைப் பொருளாகக் கொண்டு தமிழ் மொழியின் கண் சொற்கள் எழுந்த வரலாற்றைக் குறித்துச் சிறிதாராய்வாம்.

3. குழந்தைப் பேச்சு

முதல் ஈராண்டிற்குள் குழந்தையின் வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் பிறர் கற்பிக்காமல் பேச்சுக்கருவிகளின் எளிய, இயற்கை முயற்சியால் தாமே எழுவனவாகும். தாயின் மார்பிற் சாய்ந்து பாலருந்தும் குழந்தை வாய் மூடியிருப்பதால் மூக்கினால் மூச்சுவிட்டுப் பால் அருந்துகிறது. வாய்க்குப் பால் வருதல் தடைப்பட்டால் குழந்தை அழத்தொடங்குகிறது. அப்பொழுது தாயின் மார்பைக் கௌவிய இதழ்கள் திறக்கின்றன. திறக்கின்ற காலத்து மூக்கின்வளி யாப்புற எழும் ஒலி ‘மா’ என்பது. ஆகவே ‘மா’ என்ற ஒலி தோன்றுவதற்கு மூடிய இதழ்கள் சிறிது திறக்க வேண்டும். வாய்வழியும் மூக்கு வழியும் குழந்தையின் காற்றுப்பையிலிருந்து காற்று வெளிப்படல் வேண்டும். மூக்கு வழித் தோன்றும் காற்றைப் போல் வாய் வழிக்காற்றும் அதிகமானால் ‘அம்மா’ என்ற சொல் பிறக்கின்றது. மூக்கு வழிக்காற்றுமிகு மானால் ‘மம்மா’ ‘மாமா’ என்ற சொற்கள் பிறக்கின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

குறள் நெறி

மலர் 1 | திருவள்ளுவராண்டு 1995 பங்குனி 2 (15-3-64) | இதழ் 5

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

இந்திக்கு முதன்மை பிரிவினைக்கு வித்து.

இந்தியக் கூட்டரசின் பொதுப்பணிக்குழுவின் (U. P. S. C.) தேர்வு மொழியாக இந்தியை ஆக்குவதற்கு, இந்திமொழி பேசப்படாத மாநில முதல் அமைச்சர்களுடன் இந்தியக் கூட்டரசுத்துறையினர் ஆய்வு நிகழ்த்தப்போவதாகச் செய்தியொன்று வெளிவந்துள்ளது. கூட்டரசு மொழிகளில் இந்தியை மட்டும் பொதுப் பணிக்குழுவின் தேர்வு மொழியாக ஆக்குதல் இந்திக்கு மட்டும் ஏற்றம் அளித்து, கூட்டரசின் ஏனைய மொழிகளை இழிவு படுத்துவதாகும்; ஏனைய மாநிலங்களுக்கு இழைக்கும் பெருந்தீங்காகும். ஆதலின் கூட்டரசு மொழிகள் அனைத்திலும் தேர்வு எழுதுவதற்கு உரிமையளித்தல்தான் கூட்டரசுக்கொள்கைக்கு ஏற்றதாகும். இன்றேல் ஏனைய மொழியாளர் கூடி வாழ்வதால் பயனில்லை என்று கருதிப் பிரிந்துவாழும் உரிமையைத் தேடவேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாக்கப்படுவர். உளம் ஒன்றிய கூட்டுறவே என்றும் நிலைத்திருக்கும்; உளத்தால், உணர்வால், ஒன்றுபடாதவரைச் சட்டத்தால் அச்சுறுத்தி ஒன்றுபடுத்த முயலுதல் என்றும் இயலாது என்பது வரலாறு சுட்டும் பாடமாகும்.

> 'செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
> உட்பகை யுற்ற குடி''

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளுதல் வேண்டும். ஆதலின் எல்லா மாநிலங்களும் ஒன்றுபட்டு வாழும் கூட்டரசு நிலைக்க வேண்டுமானால் எல்லா மொழிகட்கும் சமஉரிமை அளிக்கவேண்டும். இந்தி மொழிக்கு மட்டும் ஏற்றம் அளித்தல், ஏனைய மொழிகளைப் புறக்கணிப்பதாகும். இதனை ஏனைய மாநில முதல் அமைச்சர்கள், சிறப்பாகத் தமிழ் மாநில முதல் அமைச்சர், இந்தியக் கூட்டரசினர்க்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

இந்தியக்கூட்டரசினர் தாமாக ஒன்றை முடிவு செய்துகொண்டு, அவ்வாறு முன்கூட்டியே முடிவு செய்த கருத்தை மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளச் செய்து, மாநில முதலமைச்சர்கள் முடிவு என விளம்பரப்படுத்துவதாக மக்கள் கருதுவது உண்மையாகிவிடக்கூடாது. மாநில முதலமைச்சர்கள் தம்பகுதிமக்களின் உள்ளக்கருத்தை எடுத்துரைத்தலில் தவறுதல் கூடாது. எங்கும் இந்தி முதன்மை எதிர்க்கப்படுவதை எடுத்துரைத்து இந்தியைப்போல் ஏனையமொழிகளையும் இந்தியக் கூட்டரசின் பொதுப்பணிக் குழுத் தேர்வு மொழிகளாக ஆக்குதல் வேண்டும். இன்றேல் பொதுப் பணிக்குழுத் தேர்வுகளை ஏனைய மொழியாளர் புறக்கணித்து ஒதுக்குவர் எனத் தெளிதல்வேண்டும். பின்னர்க் கூட்டரசினையும் புறக்கணித்து ஒதுங்கும் நிலை எவ்வாற்றானும் தானே உருவாகும்; இந்திக்கு ஏற்றம் பிரிவினைக்கு வித்து என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

இந்தியக் கூட்டரசின் கல்வியமைச்சர் சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் நிகழ்த்திய உரையாடல்களிலிருந்து பின்வருபவை தெளிவாகின்றன:

1. இந்தி மொழிதான் நாளடைவில் பல்கலைக்கழகப் பாடமொழியாகும்.
2. மாநில மொழிகள் பல்கலைக்கழகப் பாடமொழியானால் இந்தியாவின் ஒற்றுமை கெட்டுவிடும்.
3. இந்திமட்டும்தான் மாநிலங்களிடையேதொடர்பு கொள்ளும் மொழியாகும்.
4. பள்ளியிறுதி வகுப்பின் இந்திமொழித் தேர்வில் மாணவர்கள் மதிப்பெண்கள்பெற்றாகவேண்டும்.
5. இந்தியப் பொதுப்பணிக்குழுவின் தேர்வு மொழியாக இந்தியிருப்பதைத் தடுத்தல் இயலாது.

இவ்வளவும் அவர் கூற்றினால் அறியக்கூடியனவாக இருந்தும் ''எல்லோரும் ஒப்புக்கொள்ளாத வரையில் இந்தியைத் தென்னாட்டின்மீது சுமத்த முடியாது'' என்றும் கூறியுள்ளார்.

இந்தி மொழியைக் கற்றால்தான் வாழ்வுண்டு என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு ''இந்தியை விரும்பாதவர்மீது சுமத்தவில்லை'' என்றுகூறுவது அறநெறிக்கு ஒத்ததாகவும் இல்லை; மக்களாட்சி முறைக்கு மாறான தனிக் கொடுங்கோன்மையாட்சிக் குரியதாகவும் உள்ளது. திரு சக்ளா அவர்கள் உரைத்துள்ளமைபோல் இந்தி, ஆங்கிலத்தின் இடத்தை அடையப்போவது உறுதி; அதற்குரிய சூழ்நிலையைத்தான் இந்திய அரசினர் உருவாக்கிக்கொண்டு வருகின்றனர். ஒருவரைக் கொன்றுகொண்டே ''கொல்லவில்லை, கொல்லவில்லை'' என்று கூறிக்கொண்டிருப்பதுபோல், இந்திக்குமுதன்மையளித்துக்கொண்டே விரும்பாதவரும் படிக்கவேண்டிய கட்டாய சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டே, 'வங்காளத்தின்மீதும் தென்னாட்டின்மீதும் இந்தியைத் திணித்தல் இயலாது'' என்றுகூறிக்கொண்டிருப்பது எட்டுணையும் பொருந்தாது. ''பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலுமே மெய்போலும்மே'' என்பது எக்காலத்திலும் பயன்தருதலில்லை.

இந்திக்கு முதன்மை தரும் செயலே பிரிவினைக் கொள்கைக்கு ஆக்கம் தரும் வித்தாகும் என்பதனை அறிதல் நன்று. மாநில மொழிகள் அனைத்துக்கும் சமஉரிமையும் வாய்ப்பும் அளித்தலே கூடிவாழும் கொள்கைக்கு அரண் செய்வதாகும் என்பதனைத் தெளிந்து செயல்படுமாறு இந்தியக் கூட்டரசை வேண்டுகின்றோம்.

தமிழ்ப் பெருமக்களே! இந்தி முதன்மையால் ஏற்பட இருக்கும் ஒற்றுமைச் சிதைவைத் தடுக்க ஒன்றுகூடுவீர்களாக. உயர்தனிச் செம்மொழியாம் தமிழுக்குரிய இடத்தை அளிக்க ஒல்லும்வகையால் முயல்வீர்களாக.

இந்தி முதன்மையைத் தடுத்துச் செந்தமிழைக் காப்பீர்களாக.

உயர்திரு பக்தவத்சலனாரைப் பாராட்டுகின்றோம்

கல்வி மக்களுக்குக் கண்போன்றது. கல்வியற்ற வாழ்வு கண்ணற்ற வாழ்வாகும். மக்களாட்சி உருவாகி மலர்ச்சி பெற்று வரும் இக்காலத்தில் கல்வியின் சிறப்பு இன்னும் உயர்கின்றது. ஆதலின் மக்களாய்ப் பிறந்துள்ள அனைவரும் மாண்பைத் தரும் கல்வியைப் பெற்றேயாகல் வேண்டும்.

கல்வியைப் பெறுவதற்குத் தடையாக எதுவும் இருத்தல் கூடாது! பிறப்பு (சாதி), தடையாக இருந்த காலம் உண்டு. சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்ற கொள்கை வலுப் பெற்று அத்தடை நீங்கியது.

வறுமை தடையாக இருந்து வருகின்றது. உயர்நிலைக் கல்விக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கல்வி பெறுவதற்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். கட்டணம் செலுத்த இயலாதார் கல்விக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் இடம் பெறுதல் இயலாது

உயர் நிலைக் கல்விக்கூடங்களில் இறுதி வகுப்பு முடியக் கல்வி பெறுவதற்குச் கட்டணம் கிடையாது என்று தமிழ் நாட்டு அரசு அறிவித்துள்ளமை பாராட்டி வரவேற்கத்தக்கதாகும். கல்வியமைச்சர் (முதல் அமைச்சர்) உயர்திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் 'கல்விக்குக் கட்டணம் இல்லை' எனும் இக்கொள்கை நடைமுறைக்கு வருகின்றமையின் உயர்திரு பக்கவத்சலனார் அவர்கள் பாரில் நிலைத்த புகழுக்கு உரியவராகின்றார். அன்னாரைப் பாராட்டிப் புகழ்கின்றோம். இவ்வாறே கல்லூரியிலும் கட்டணமின்றிக் கல்வி பெறும் நிலையை உடனே உண்டாக்குதல் வேண்டும் மேலை நாடுகளில்- அண்மையில் உள்ள சிறிய இலங்கையில் கூட- கல்லூரிக் கல்வி முடியக் கட்டணமின்றிக் கல்வி பெறும் வசதி இருக்கின்றதாம். ஏன் நம் நாட்டிலும் அவ்வாறு செய்தல் கூடாது?

இன்று கட்டணம் செலுத்துவோரும் குறைந்த எண்ணிக்கையினராகவேயிருப்பர். ஏனெனில் 'பிற்பட்ட நிலையில் உள்ளவர்கள்' எனக் கருதப்படுபவர்களுக்கு இன்று கட்டணச் சலுகை உண்டு. ஆதலின் செல்வர்கள் என்று கருதப்படுவோர்கள்தாம் கட்டணம் செலுத்துகின்றனர். ஆதலின் இக்கட்டணம் பெறும்திட்டம் கூட செல்வர்களுக்குத்தான் உதவியாகும். ஆயினும் **"எந்நிலையிலும், எவர்க்கும் கல்விக்குக்கட்டணமில்லை"** என்ற கொள்கை ஏற்றிப் புகழ்வதற்குரியது நாட்டில் கல்வியறிவைப் பரப்புவதற்குப் பெருந்துணை புரிவது.

"கட்டணம் பெறாமல் கல்லூரிகளை எவ்வாறு நடத்துவது" என வினவலாம். அவரவர் செல்வ நிலைக்கு ஏற்ப கல்விக்கென வரிவிதித்துப் பெற்று உதவவேண்டியதுதான் அரசின் கடமையாகும். ஆகவே எல்லா நிலைகளிலும் கல்விக்குக்கட்டணமில்லை என்ற நிலையைவிரைவில் உண்டாக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

"கட்டணமில்லையென்றால் கல்வித்தரம் குறைந்து விடும்" என்பது பொருந்தாது, கல்வித் தரத்தைக் கட்டணத்துடன் தொடர்புபடுத்துவது ஆசிரியர் தொழிலையே இழிவுபடுத்துவதாகும்? கல்வியின் பேரால் பொருள் ஈட்டுவோர்க்கு கட்டணம் பெருக்கொள்கை இடையூறாகத் தோன்றலாம். ஆனால் அதனையும் கடந்து பொருள் பெறும் முறையை அவர்கள் அறிவர். இன்று நன்கொடையின் பேரால் கட்டணங்களைப் பெருந்தொகையாகப் பல நிலையங்கள் பெற்று வருகின்றனவே அரசு கண்டும் காணாததுபோல் இருக்கின்றதே ஆதலின் கல்வி நிலையங்களைப் பொருளீட்டும் வாணிப நிலையங்களாகக்கருதுவோர் கூற்றுக்குச் செவிசாய்க்காது இந்நாட்டில் எல்லா நிலைகளிலும் கல்விக்குக் கட்டணம் இல்லை என்ற கொள்கையைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுகின்றோம். அப்பொழுதுதான் "கல்வி சிறந்த தமிழ்நாடு" ஆகும், கற்றோர் நிறைந்த நாடாகும். மக்களாட்சியும் மாண்புறும்.

நகர் மன்றத் தேர்தலுக்குப் பின்னர் . . . .

நகர் மன்றத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. அவரவர்கள் உழைப்பைப் பொறுத்து வெற்றி தோல்விகள் நிகழ்ந்துள்ளன. கட்சிப்பாகுபாடுகளை நகர் மன்றத் தேர்தலில் புகுத்தி இருக்க வேண்டியதின்று. மாநில ஆட்சிக்கு நகராட்சி மன்றங்கள் கட்டுப்பட்டவை ஆதலின்மாநில ஆட்சியின் கருத்துக்கு ஏற்பவே நகர் ஆட்சி மன்றங்கள் பணிபுரிய இயலும் ஒரு நகராட்சி மன்றம் தன் நகரத்திற்கு நன்மை பயக்கும் திட்டங்கள் வகுத்தாலும் மாநில ஆட்சியின் இசைவின்றி அத்திட்டங்களை நிறைவேற்ற இயலாது ஆதலின் ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்களால் நகராட்சி மன்றங்கள் ஆளப்படுதலே இன்றுள்ள சூழ்நிலையில் நன்றெனத் தோன்றும். இதனை உளத்திற்கொண்டுதான் பெரும்பாலான நகர் ஆட்சி மன்றங்களுக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே ஆட்சிப பொறுப்பை ஏற்கும் நிலையை பொது மக்கள் உண்டு பண்ணியுள்ளனர் போலும். ஆதலின் நகராட்சித்தேர்தல் வெற்றியைக் காட்டி காங்கிரசுக் கட்சித் தாம் கடைப் பிடிக்கும் கட்டாய இந்தி போன்ற திட்டங்களுக்கு மக்கள் ஒப்புதல் உளது என்று கூறுதல் பொருந்தாது வெற்றி தோல்விகளைக் கட்சிக் கண்ணோட்டத்துடன் நோக்காது நகர் மக்களுக்குத் தொண்டு செய்வதில் நாட்டம் செலுத்தலே நாட்டுக்கு நன்மைபயப்பதாகும். தேர்தல்கள் முடிந்தும், ஆங்காங்கு தேர்தலால் ஏற்பட்ட பகைமையுணர்ச்சிகள் இன்னும் மறையாமல் இருப்பது வருந்தத்தக்கது கட்சிவெறி மதவெறியினும் கொடியதாகி. ஆங்காங்குக் கொலை. கொள்ளை நிகழ்வதாகச் செய்திகள் வருவது நாட்டுப் பற்றுடையோரைக் கவலைக்கு ஆளாக்குகின்றது உண்மையான மக்களாட்சியில். தேர்தல்கள் முடிந்தவுடன் வெற்றி பெற்றோரும் தோல்வியுற்றோரும் தேர்தல் பகைமையை மறந்து நட்புணர்வு கொண்டு நாட்டுக்கு நலம் பயக்கும் தொண்டுகளில் ஈடுபடுதலே ஏற்றது. ஆதலின் இனி முடிந்த தேர்தல்களை மறந்து நகர்க்கு முன்னேற்றம் பயக்கும் செயல்களில் கருத்துச் செலுத்துமாறு அனைவரையும் அன்போடு வேண்டுகின்றோம்.

தமிழாசிரியர்க்குப் பயிற்சி.

உயர் நிலைக்கல்விக் கூடங்களில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றும் புலவர் (வித்துவான்) பட்டம் பெற்றவர்கட்கு ஆசிரியர் பயிற்சி வேண்டும் என்று கூறுவது பொருத்தமுடைத்தே. இனித் தமிழாசிரியர்களாகப் பணிபுரிய வருவோர்க்குப் பயிற்சி பெற்ற தகுதியும் வேண்டுமென வற்புறுத்தலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே ஆனால் பத்து ஆண்டுகட்கு மேல் தமிழ் ஆசிரியராகப்பணி புரிந்துள்ளோரைக்கூட ஆசிரியர் பயிற்சி பெற வேண்டுமென வற்புறுத்துதலும் ஆசிரியர் பயிற்சி பெறும் வரை அடிப்படை ஊதியமே அளிக்கப்படுமென பெற்றுக் கொண்டிருக்கும் ஊதியத்தைக் குறைப்பதும் அறனும் அன்று. அறிவு நெறிக்கு ஒத்ததும் அன்று; ஆதலின் மேலிடத்தோர் தாம் விடுத்திருக்கும் ஆணையைப் பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டுகின்றோம். ஐந்து ஆண்டு ஆசிரியராகப்பணி புரிந்தவர்களை இப்பயிற்சி பெறுதலினின்றும்விலக்குதல் செய்யலாம். பயிற்சி பெறுவோர்க்கு அவர் பயிற்சி பெறும் வரை அவர் பெற்று வரும் ஊதியத்தைக் குறைத்தலாகாது. பயிற்சி பெற விரும்புவோர்க்கெல்லாம் பயிற்சிக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது இல்லை என்பதை அறிதல் வேண்டும். ஆகவே இன்னும் பயிற்சிக்கல்லூரிகளைப்

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

அலுவலகங்களில்

ஆட்சித் தமிழ்

— க. சகன்னாதன்

முன்பு அந்நிய ஆட்சி நிலவிய காலத்தில் ஆட்சி அலுவலராகப் பணியேற்க விரும்புகின்றவர்கள் ஆங்கில மொழியைக் கற்றுத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயச்சூழ்நிலையிருந்தது. ஆகவே, அன்று ஆங்கில மொழியைக் கற்பதும், அதிலேயே எழுதுவதும் பேசுவதும் - எல்லாம் பெருமை யென்று கருதப்பட்டதில் வியப்பில்லை ஆங்கிலப்புலமையை அலுவலகக் கட்டுகளில் எந்த அளவிற்கு வெற்றிகரமாகக் கையாளுகின்றார்களோ, அந்த அளவிற்கு அவ்வலுவலர்கள் திறமை சான்றவர்களாகப் பாராட்டுப் பெற்றனர். அப்படிக் கையாளும் திறனற்றவர்கள், மேலதிகாரிகளால் "Poor in Noting and Draftiug" "inefficient" என்றெல்லாம் கருதி ஒதுக்கப் படுவாராயினர். ஆகவே ஒருவரது பணித்திறமை அவரது ஆங்கில மொழிப் புலமையை வைத்தே எடை போடப்பட்டது என்பதால் உயர்நிலைப்பள்ளியின் இறுதித் தேர்வு முடித்து எழுத்தராகப் புகுந்த பெரும்பான்மையினர் கூட, அரசாங்க ஊழியராக அமர்ந்த பின் அம் மொழியில் திறன் பெறுவதற்காக மேலும் மேலும் முயன்று ஆங்கில மொழி அறிவை வளர்த்துக் கொள்வதில் பெரிதும் ஊக்கம் காட்டினர். இப்போது நாம் அவர்களை குறை கூறிப் பயனில்லை; அவர்களது சூழ்நிலை அப்படி ஆக்கி வைத்திருந்தது.

ஆனால் விடுதலை பெற்றுக் குடியரசாக நாடு மலர்ந்த பல்லாண்டு கட்குப் பின்னர், அதிலும் தாய் மொழியாம் தமிழ் ஆட்சி அரியணையில் அமர்த்தப் பெற்ற பெருமை மிக்க இச் சூழ் நிலையில், இன்றுள்ள பெரும்பாலான ஆட்சி அலுவலர்கள் ஆங்கிலத்திலே பேசுவதும் எழுதுவதும் தான் பெருமை எனக் கருதுகின்றார்கள் என்றால் இது மிகமிக வேதனைக்குரியது

அணிமையிலுள்ள ஆந்திர நாட்டிற்கோ அல்லது தொலைவிலுள்ள வங்கத்திற்கோ, அந்த மொழியறியாத பிற மொழியினர் சென்றால், ஆங்குள்ளவர்கள் முதலில் தப், தாய் மொழியில் தான் வந்தவர்களிடம் கேள்வி கேட்கின்றார்கள். புதிதாக வந்தவர் தம்மொழியறியாதவர் என்று தெரிந்து கொண்ட பின்னரே ஆங்கிலத்தில் பேச முற்படுகின்றார்கள் என்று அங்கு சென்று வந்துள்ள பல நண்பர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம் அவர்களது தாய் மொழிப்பற்றை என்னென்று வியப்பது? ஆனால் தமிழகத்தில் மட்டுமே சிறிது ஆங்கிலம் கற்றவுடன், தம் இன்பத் தமிழை மறந்து ஆங்கிலத்திலேயே நீந்தித் திளைக்க முயலும் மனப்போக்கு எப்படியோ வளர்ந்து விட்டது தமிழனாகப் பிறந்ததற்காக ஆங்கிலப் பேராசான் போப்பையர் போன்றவர்களை நினைத்துப் பெருமிதம் கொள்வதை விட்டு, இத்தகைய வருந்தத்தக்க மனப்போக்கு வளர்ந்து விட்டிருக்கிறது என்பதற்காக இன்றுவெட்கித் தலைகுனியத்தான் வேண்டியிருக்கிறது

பிறமொழியினர் இருக்கட்டும்! தன் அண்டை வீட்டு அன்பரைப் பார்க்கும் பொழுது கூட "Hullow! Good morning, How do ycu do?" என்று ஆங்கிலத்தில் தான் பேச விரும்புகின்றார்கள் ஒரு வேளை அழகுத் தமிழில் "ஐயா, வணக்கம்! நலமா?" என்று கேட்டால், தான் தமிழனாக எடுத்த இந்தப் பிறவிக்கு இழுக்கு வந்து விடும் என்று அஞ்சுகின்றார்கள் போலும். நகரப் பகுதிகளில் நாளும் எங்கு நோக்கிடினும் ஆங்கில ஒலிதான் முதன்மையாகக் கேட்கின்றது நிலையங்களில் நின்று கொண்டிருக்கும் பொழுதும், வண்டிகளில் பயணம் செய்யும் பொழுதும் மாலைக் காற்று வாங்க நடைபயிலும் பொழுதும்கூடப் பலர் நடத்தும் உரையாடல்களைக் கேட்கும் பொழுது, நாம் தமிழகத்தில் தான் இருக்கின்றோமா அல்லது வேறு ஏதாவது ஆங்கில நாட்டிற்குள் புகுந்து விட்டோமோ என்ற ஐயப்பாடு தமிழ்ப் பற்றுடையவர்களுக்கு ஏற்படுவது உறுதி! ஆங்கிலத்தில் சரியாக உரையாடும் திறனில்லா விடினும் கூட, அரை குறையாக ஆங்கிலச் சொற்களை முதலில் உதிர்த்து விட்டுப் பிறகு தான் தமிழ்ச் சொற்களை வெளிவிடுகிறேன் என்கின்றார்கள்.

இன்னும் ஒரு வேடிக்கை என்னவெனில். தமிழ் மொழியில்தோன்றிய ஒப்புபர்வற்ற வாழ்வியல் இலக்கணமாம் திருக்குறளில் சிறிதே ஈடுபாடுடையவராகக் காட்டிக் கொள்வதில் கூட, ஒரு குறளின் அடியைப் பொருத்தமற்ற இடத்தில் பொருளற்ற முறையில் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துக் கூறிவிட்டுப் பின்னர் தமிழில் விளக்கம் தருகின்றார் ஒருவர் என்றால் அது நம்புதற்குரியதா? கற்பனையன்று; உண்மையில் நடந்தது தான்.

ஒரு செய்தித் தாளில் வந்த ஏதோ ஒருவேண்டாதசெய்தியினைப் படித்து விட்டு அதன் மீது தங்களின் மேலான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் இரண்டு அன்பர்களில ஒருவர் மற்றவர்க்குச் சொல்கின்றார் -

"சார் வள்ளுவர் தெரியாமலா சொல்லியிருக்கின்றார்! Loveக்கும் உண்டோ Lock and Key" என்று பாடியிருக்கின்றாரே!"

இதைப் புரிந்து கொள்ள முடியாத மற்றவர் "நீங்கள் எதைச்சொல்கிறீர்கள் ?"

முதலாமவர்:— "அதுதான் சார், அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்!" என்று ஓர் இடத்தில் கூறியிருக்கின்றார். அதைத்தான்குறிப்பிடுகிறேன்."

இத்தகைய ஓர் உரையாடலைக் கேட்கும் பொழுது அழுவதா. சிரிப்பதா என்றுதான் தோன்றவில்லை. இந்த உரையாடலின் ஆசிரியர்கள் இருவரும் ஆட்சி அலுவலர்களே!

இன்னொரு காட்சி! மதுரை நகருக்கு புதிதாக மாற்றலாகி வந்த ஒரு நண்பரைக் கண்ட இன்னொருவர் கேட்கின்றார்.- "ஏன் சார் இதற்கு முன்னால் எங்கே work பண்ணினீர்கள்.?"

புதிய நண்பரின் பதில்.- Three months before வரைக்கும் திருச்சியில் இருந்தேன், after that, Tanjore for two moths இருந்தேன். இப்போ இந்த ஊருக்கு வந்து just one month ஆச்சு!" எப்படியிருக்கிறது தமிழ் பார்த்தீர்களா? இப்படித்தான் ஆங்கிலக் கலப்போடு பேசித் தீர்க்க வேண்டுமா? இதையேஅழகுற 'மூன்று மாதங்கட்கு முன் வரை திருச்சியிலே இருந்தேன். பிறகு தஞ்சையிலே இரண்டுமாதங்கள் இருந்தேன் இப்பொழுது இங்கு வந்து ஒருமாதமாகிறது" என்று பேசினால் ஆகாதா? ஆங்கிலத்தில் ஊறிப் போனவர்கள் சிந்திக்க வேண்டும். இப்படியே பேசிக் கொண்டிருந்தால் தமிழின் நிலை என்னாவது? இந்த அளவிற்கு ஆங்கிலப் பற்று தமிழர் நெஞ்சிலே புரையோடி யிருந்தால் இத்தகையவர்களால் எப்படி அலுவலகங்களில் தமிழை வெற்றிகரமாகப் புகுத்த முடியும்? அல்லது புதிதாக அலுவலகப் பணியாளராக வரும் இளைஞர்களுக்குத்தான் அத்தகு முதுநிலை ஊழியர்களால் எப்படித்தமிழ் ஆட்சித்துறையில் வழிகாட்டியாகஇருக்க முடியும்?.

ஆகவே அலுவலகங்களில் ஆட்சித் தமிழ் செழிப்புற வளர வேண்டுமானால், அதற்கு அடிப்படையாக அலுவலக ஊழியர்கள் முதலில் தாய் மொழியாம் தமிழிலேயே சிந்தித்துத் தமிழிலேயே பேசுவது என்று பழகிக்கொள்ள வேண்டியது மிகமிக இன்றியமையாதது. அதனால் ஆங்கிலமே வேண்டாமென்று பொருளன்று உள்ளத் தொடர்புக்குத் தமிழும் உலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் என்று வைத்துக் கொண்டால் போதுமானது. திறமைக்குத் தக்கவாறு எத்தனை பிறமொழிகளைக் கற்ற போதிலும் உள்ளத்தின் உண்மையொளியாகத் திகழ வேண்டியது தமிழேயன்றோ?

(தொடரும்)

தமிழாசிரியர்க்குப் பயிற்சி … …

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்குதல் வேண்டும். B. T. பட்டமளிக்கும் பயிற்சிக்கல்லூரிகளில். மட்டும் அன்றி 'வித்துவான்' பட்டத்துக்குரிய தமிழ்க் கல்லூரிகளிலும் பயிற்சியளிக்கும் வசதியைச் செய்து தரல் வேண்டும்.

ஆங்கிலப் பட்டம்பெற்றோர்க்கு B. T. என்ற பட்டம் அளிப்பது போல் தமிழ்ப்புலமைப் பட்டம் பெற்றுப் பயிற்சி பெறுவோர்க்கு 'ஆசிரியர்' என்ற பட்டம் அளித்தல் வேண்டும் என வேண்டுகின்றோம்.

(1-3-64 இதழின் தொடர்ச்சி)

திருக்குறளில் உருவகம்

பேராசிரியர் வீ. ஒப்பிலி

இனி நீர் உருவகமாகப் பயன்படும் மற்ற குறட்பாக்களை எடுத்துக்கொள்வோம்.

நீர் தூய்மையை உண்டாக்கும் தன்மையுடையது. புறத்தே தோன்றும் **அழுக்கை நீக்கும்** நீர் அகத்தே தோன்றும் வாய்மையின் உருவகமாகிறது.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் (298)

வாய்மையின்மையால் நேரும் கேட்டினையும், அப்போது நீர் பயன்படாது போவதையும் 'மாக்பெத்து' என்ற நாடகத்தில் சேக்சுபியர் எடுத்துக் காட்டுகிறார். அகத் தூய்மையைக் குறிக்கும்போதெல்லாம் அக்கவிஞரும் நீரை உருவகமாகப் பயன்படுத்துகிறார். இவ்வாறு தோன்றும் இரண்டொரு காட்சிகளை இங்குக் காண்போம்.

விருந்தினனாய்த் தன் இருப்பிடத்திற்கு வந்து உண்டு உறங்கிய அரசனை நள்ளிரவில் மாக்பெத்து வாளால் குத்திக் கொன்றுவிடுகிறான். அரசைப் பெறவேண்டுமென்ற ஆசையும். தீமையே உருக்கொண்ட அவனது மனைவியின் ஆர்வமும் மாக்பெத்தைக் கொலைகாரனாக்குகின்றன. இக்கொடுஞ் செயலுக்குப்பின் அவன் கையில் இரத்தக்கறை படிந்திருக்கிறது. அதைக் கண்டவுடன் மனம் துணுக்குற்று, தனது தீய செயலின் தன்மையை எடுத்துரைக்கிறான். அப்போது அவன் "மாபெரும்கடல்களின் நீர் அனைத்தும் கையில்படிந்துள்ள இவ்விரத்தத்தை அறவே கழுவிநீக்கப் பயன்படுமோ? என்று சொல்லித் தன்னை நொந்துகொள்கிறான். அவனது மனைவியோ "இச்செயலின் அடையாளத்தைக்கழுவ **கொஞ்சம் தண்ணீரே** தேவை! எவ்வளவு எளிது?" என்கிறாள், வாய்மை அழிவதால் எழும் உள்ளத்து மாசை அவ்வளவு எளிதாகக் கழுவமுடியுமா? பின்னர் அவள் நோயிலாழ்ந்து. தன்வயமிழந்து, இரவில் தூக்கமின்றி நடந்துசெல்கிறாள். அப்போது கைகளை நீரால் கழுவுவதுபோல் மீண்டும்மீண்டும் தோற்றம் செய்கிறாள்! "அழிக்கும் இரத்தக்கறையே, அழிந்துபோ! மறைந்து போ!... என்ன?... இக்கைகள் ஒருபோதும் தூய்மையாக இராவோ? .. கையைக் கழுவு!" என்றெல்லாம் பிதற்றுகிறாள். வாய்மையில்லாது, வஞ்சனையாக அன்புகொண்டது போல் நடித்து, கொலைச் செயல் புரியத் தூண்டிய மாக்பெத்தின் மனைவி தனது அகத்தில் தோன்றிய மாசைக் கழுவி நீக்க வல்ல **நீரைத்** தேடுகிறாள்! உடலோடு ஒட்டிய அழுக்கை நீக்கும் நீர் உள்ளத்தில் ஊறியமாசையும் எளிதில் கழுவும் என்றவள் நினைத்தது பொய்யாகிறது. எல்லாம் வாய்மையின்மையால் வந்த தீப்பயன்! இவ்வாறு திருவள்ளுவரிடம் காணப்படும் **நீர்–தூய்மை** உருவகம் சேக்சுபியர் உள்ளத்தில் நாடக உருக்கொள்கிறது.

ஊரார் நீருண்ணும் குளத்துநீர் **ஒப்புரவின்** உருவகமாகிறது. ஆயினும் குளம் **கரையில்லாது**போயின், அது நிறைந்தும் பயனில்லை. அப்போது நீர் **தீங்கின்** அடையாளமாகிறது, இப்பொருள் பாதுகாக்கும் சுற்றத்தார் இல்லாதவன்ன் துன்ப வாழ்க்கைக்கு உருவகமாகிறது.

தோண்டிய அளவிற்கு நீர் ஊறும் மணற்கேணி கற்ற அளவு ஊறும் நல்லறிவிற்கு அடையாளமாக நிற்கிறது. இங்கு இறைப்பதால் ஊறும் நீர் கற்பதால் எழும் **அறிவிற்கு** உருவகமாகிறது.

இவ்வாறே இறைக்க, இறைக்க மிகும் ஊற்றுநீர் மறைத்தாலும் தானே கட்டுமீறி **வளரும் காமநோய்க்கும்** உருவகமாகிறது. கல்வியறிவின் ஆழத்தையும், காமத்தின் மிகுதியையும் எடுத்துக்காட்ட நீர் உருவகம் பயன்படுகிறது. காமம் பெருகுங்கால் **கடும்புனலாக** மாறுகிறது. இரவில் தனியேயிருக்கும் தலைவி இவ்வெள்ளத்தில் நீந்திக்கரைசேர முடியாது தவிக்கிறாள். இவ்வாறு, கரை சுற்றத்தாரின் ஆதரவிற்கும், தலைவனின் அன்பிற்கும் உருவகமாகிறது. கரைபுரண்ட வெள்ளம் தீங்கின் வடிவாகிறது. இக்கரையற்ற கடும் புனலில் சிக்கிய தலைவியின் கண்களும் வெள்ளமாகிய கண்ணீரில் நீந்தி வருந்துகின்றன! மனமோ கணத்தில் கரைசேர்ந்து காதலரோடு உறவாடுகிறது! இவ்வாறு **வெள்ளம் தீமைக்கும், கரை காப்பிற்கும்** உருவகங்களாகின்றன. பயிர் நீரால் செழிக்கிறது. இப்பொருள் அன்னையின் கடுஞ்சொல்லால் வளரும் காமநோய்க்கு உருவகமாகிறது. இங்கு நீர் செழுமையின் சின்னமாகிறது. **நீர்-ஊடல்** உருவகத்தை முன்னர்க்கண்டோம் (1323). அன்புடைய தலைவனிடம் ஊடல் இனிது; அன்பற்றவரிடம் ஊடுதலால் பயனில்லை. இதை எண்ணிப் பார்த்த திருவள்ளுவர், நீரின் தன்மையை மீண்டும் நினைவுறுத்துகிறார். வெள்ளமாக நீர் பெருக்கெடுக்கையில் அதில் பாய்ந்து நீந்திக் கரைசேர வெண்ணுதல் வீணானது. இது தன்னைத்தானே மாய்த்துக்கொள்வதற்கு ஒப்பான வீண் செயல். அன்பில்லாத தலைவனிடம் ஊடல் செய்தலின் பயனற்ற தன்மையைக் குறிக்க இவ்வாறு **வெள்ளம்–ஊடல்** உருவகம் பயன்படுகிறது. கட்டுக்கடங்காது, தன் விருப்பப்படி எல்லாவற்றையும் இழுத்துச் செல்லும் இயல்புடையது வெள்ளம். மற்றெல்லா உணர்ச்சிகளையும் அழித்து, உடலையும் உள்ளத்தையும் வருத்தி அலைக்கழிக்கும் காமமும். பிரிவால் எழும் கண்ணீரும், (விரைவாலும் மிகுதியாலும்) வெள்ளமெனப் படுகின்றன. **காமக்கடும்புனல்** என்ற தொடர் இருகுறட்பாக்களில் தோன்றுகிறது.

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை (1134)

காமக் கடும்புனல் நீந்திக்கரை காணேன்
யாமத்தும் யானே உளேன் (1167)

முதற்பாட்டில், காமவெள்ளத்தில் வீழ்ந்ததலைவன் தனது துன்பத்தை எடுத்துரைக்கிறான். நாணமும், நல்லாண்மையும் இங்கு தோணிகளாகச்சொல்லப்படுகின்றன. அத்தோணிகளைக்காமவெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டதால், காதலன் துன்பவயப்படுகிறான். இதுபோலவே இரண்டாவதுபாட்டில் காமவெள்ளத்தில் சிக்கிய தலைவி துன்புறுகிறாள். இரவில் தனிமையில்வருந்தும் அவள் காமவெள்ளத்தை நீந்த வகையறியாது வருந்துகிறாள். இவ்விரு பாடல்களிலும். "வெள்ளம்–காமம்" "தோணி–துணை", "கரை–இன்பம்" -உருவகங்கள் இணைகின்றன. கரை-காப்பின் வடிவாதலால், கரை புரண்ட வெள்ளம் தீங்கின் வடிவாகிறது. வெள்ளத்தைக் கடக்க உதவும் தோணியும் காப்பின் சின்னமாகிறது,

(தொடரும்)

'அன்னை' காபியை
அருந்துங்கள்

(1—3—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

(எழுத்ததிகாரம்)

— பேராசிரியர் சி. இலக்குவனார்

நூன் மரபு :

13 **அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**
இசையிடன் அருகும் தெரியும் காலை.

மகரமெய் (ம்), தனக்குரிய அரை மாத்திரையிலும் குறுகி ஒலித்தலைப் பெற்றுள்ளது. ஆராயுமிடத்து, அது அவ்வாறு ஒலிக்குமிடம் சிறுபான்மையாகிவரும். வேறொரு மெய்யோடு சேர்ந்து வருங்கால் அவ்வாறு ஒலிக்கும்.

'போலும்' என்பது செய்யுளில் 'போன்ம்' என வரும். இதில் உள்ள 'ம்' அரைமாத்திரை பெருது. கால் மாத்திரையே பெறும் என்பர்.

14 **உட்பெறு புள்ளி உருவா குமமே.**

மாத்திரை குறைந்து ஒலிக்கும் மகரத்திற்கு வரி வடிவம், உள்ளே புள்ளிபெற்ற வடிவமாகும். இவ்வடிவம் இப்பொழுது வழக்கில் இன்று.

15 **மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.**

தனிமெய்யெழுத்தினது வடிவ இயல்பு புள்ளி பெற்று நிற்பதாகும்.

புள்ளிபெறுவதால் மெய்யெழுத்து, 'புள்ளி' என்றே அழைக்கப்படும். மெய்யெழுத்தின் புணர்ச்சிபற்றிக் கூறும் இயலைப் புள்ளிமயங்கியல் என்றே ஆசிரியர் தொல்காப்பியர் அழைத்துள்ளார்.

16 **எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.**

எகரமும் ஒகரமும் அவ்வாறு புள்ளிபெற்று வரும் இயல்பினைப் பெற்றுள்ளன.

குற்றெழுத்துக்களாம் எ, ஒ இரண்டும் முன்பு எ், ஒ், எனப் புள்ளியிட்டு எழுதப்பட்டன. அவை நெடிலாகும்போது புள்ளிகளை இழந்து எ, ஒ (தற்பொழுதைய குறில்கள்) என நின்றன.

வீரமாமுனிவர், புள்ளியற்றிருக்கும் நிலையைக் குறிலாக்கி, ஏ, ஓ என்பனவற்றை நெடிலாக்கினர் என்பர்.

17 **புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
உரு உருவாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்தல் ஆறே.

மெய்யெழுத்துக்கள் உயிர்களோடு சேர்ந்து ஒலிக்குங்கால் அவற்றின் வடிவங்களின் நிலையை இந்நூற்பா கூறுகின்றது. 'மெய்' அகர உயிரோடு சேருங்கால் புள்ளியை இழந்துநிற்கின்றது. க்+அ =க. மெய் பிறஉயிரோடு சேருங்கால் வடிவம்வேறுபடுகின்றது. க்+ஆ=கா. இவ்வாறு இரண்டு வகையில் உயிர்மெய்யெழுத்துக்கள் உருவாகின்றன.

ஆங்கிலத்தில் உயிரும் மெய்யும் தனித்தனியாக எழுதப்படுகின்றன. 'முருகன்' என்பதை ஆங்கிலத்தில் MURUKAN என்று எழுதுகின்றோம். தமிழிலும் அவ்வாறே எழுதினால் 'ம்உர்உக்அன்' என்று எழுதவேண்டும். இவ்வாறு எழுதினால் காலக்கேடும் இடப்பெருக்கமும் முயற்சியிழப்பும் உளவாகுமன்றோ? ஆதலின் நம் தமிழ் முன்னோர்கள் 'உயிர்மெய்' எழுத்தை மெய்யெழுத்தினின்றே உருவாக்கி உதவினர். ஆயினும் உயிர்மெய் எழுத்து உயிரும் மெய்யும்கூடியவரிவடிவமாதலின் அதனைத்தனியெழுத்து எனக் கணக்கிட்டாரிலர். முதல் எழுத்து முப்பது என்றே கூறினர். உயிர்மெய் 216 ஐயும் கணக்கில் சேர்த்திலர். நாமும் சேர்த்தல் கூடாது என்பதனை நினைவிற்கொள்ளல் வேண்டும்.

18 **மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே.**

'உயிர்மெய்'எழுத்தில்உயிர்,மெய்யின்பின்னர்த் தோன்றும். 'க' எனும் உயிர்மெய்யில் 'க்' முன்னரும் 'அ' பின்னரும் ஒலிப்பது காண்க.

அன்றியும் சொற்கள் ஒன்றோடொன்று சேருமிடத்து, மொழிமுதல் கடைகூறவேண்டும். அப்பொழுது முன்னே உள்ளது 'மெய்' என்றும் பின்னே உள்ளது 'உயிர்' என்றும் கூறுதல்வேண்டும். 'கிளி' என்னும் சொல்லில் 'க்' மொழி முதலாகும். 'இ' மொழி இறுதியாகும்.

19 **வல் எழுத்து என்ப க, ச, ட, த, ப, ற.**

மெய்யெழுத்துக்களை ஒலிப்பு முறையால் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்திக் கூறுகின்றனர்.

க, ச, ட, த, ப, ற என்பன வல்லெழுத்துக்கள் எனப்படும்.

20 **மெல் எழுத்து என்ப ங, ஞ, ண, ந, ம, ன.**

ங, ஞ, ண, ந, ம, ன மெல்லெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

பிழை திருத்தம்: நூற்பா 10. 'உயிரியல் திரியர்' என்பதனை 'உயிரியல் திரியா' எனத் திருத்திக்கொள்க.

(தொடரும்)

'குறள் நெறி' உரிமை விளக்கம்

(படிவம் (Form) 4 விதி 8 காண்க)

1. வெளியிடும் இடம் : கருமுத்து அகம், திருநகர், மதுரை-6.
2. வெளியிடும் காலம் : மாதமிருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : கு. திரவியம்
   இனம் : தமிழர்
   முகவரி : மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1.
4. வெளியிடுபவர் பெயர்: பேராசிரியர் சி. இலக்குவனர்
   இனம் : தமிழர்
   முகவரி : கருமுத்து அகம், திருநகர் மதுரை-6.
5. ஆசிரியர் பெயர் : பேராசிரியர் சி. இலக்குவனர்
   இனம் : தமிழர்
   முகவரி : கருமுத்து அகம், திருநகர், மதுரை-6.
6. இதழில் பங்கு கொள்ளும் பங்குதாரர்கள் பெயரும் முகவரியும் } பேராசிரியர் சி. இலக்குவனர் கருமுத்து அகம், திருநகர், மதுரை-6.

சி. இலக்குவனாகிய யான், மேற்கண்ட விவரங்கள் யானறிந்தவரையில் உண்மையானவை என்று உறுதியுடன் கூறுகின்றேன்.



1-3-64

வேண்டுகோள்

பேரன்புடையீர்,

மொழிநூல் அறிஞரும் தமிழ்ப் பெரும்பேராசிரியரும் ஆகிய திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களின் மணிவிழாவினை மதுரையில் சிறப்புறநடாத்த முடிவு செய்துள்ளோம். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாகத் தனித் தமிழுக்கும், மொழிநூல் துறைக்கும் இம் மூதறிஞர் ஆற்றிய பெருந் தொண்டுகள் மொழிவரலாற்றில் முதலிடம் பெறுவனவாகும். இப்பொழுது பல்வேறு இடுக்கண்களுக்கு இலக்காகித் துயருறும் இப்புலவர்பெருந்தகையார்க்கு மணிவிழாவின்போழ்து ஒரு பெருநிதி அளிக்க எண்ணியுள்ளோம். இப்பெருநிதி இப்பேரறிஞரின் தலைசிறந்த ஆராய்ச்சி நூல்கள் வெளிவரப் போதிய வாய்ப்பினை நல்கும்.

அதற்குத் தாங்கள் அருந்தொகை உதவிய பெருந்தகையாளராகி விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

தங்கள் அன்புள்ள,

டாக்டர் மெ. சுந்தரம்,

எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

பொருளாளர், **பாவாணர் மணிவிழாக் குழு,**
247, கீழமாசி வீதி, மதுரை–1.

மேலை மருத்துவ முறைகள்

— **டாக்டர் ச. காமேசுவரன்**

(1—3—64 இதழின் தொடர்ச்சி)

இம்முயற்சியில் தனக்குத்தானே செய்துகொள்ளும் உதவியும் குடும்பத்தினர் செய்யும் உதவியும் ஒரு காது மந்தமானவனை எவ்வளவோ முன்னேற்றம் காணச் செய்யமுடியும். குடும்பத்தினரும் நெருங்கிய உறவினரும் சிறிது முயன்றால் காது மந்தமானவர்களுக்கு உண்மையான உதவி செய்யலாம் அனாவசியமாகக் கத்திக் கத்திப் பேசாமல், நிதானமாகச் சொற்களை நிறுத்தி, துல்லியமாகத் தனித்தனியாகப் பேசவேண்டிய அவசியத்தை நண்பர்களும், உறவினர்களும் உணர்ந்தால் மிக்க பயன் விளையும். எல்லோராலும் செய்யப்படும் உதவியை விடத்தனக்குத்தானே செய்துகொள்ளும்உதவிதான் மிகச்சிறந்தது. காது மந்தமானவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளக்கூடிய முக்கியமான உதவி உண்மைநிலையை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு, இதை எப்படிச் சீர்படுத்தலாம் என்று சிந்திப்பது தான். கவலைப்பட்டுக்கொண்டு ஒரு மூலையில் முடங்கிக் கிடந்து பிற மனிதருடன் கலந்து பழகப் பின்வாங்கிக்கொண்டு வாழ்க்கையைக் கெடுத்து விடக்கூடாது.

கென்னத் டே (Kenneth Day) என்னும் அறுவை நிபுணர் தனக்கே இளமையில் செவி மந்தமாய் இருந்தது என்று கூறித்தன்வரலாற்றைக் குறிக்கும் போது, "எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தியை மறைப்பதற்கு வீணாகமுயன்ற நான், மண்ணுக்குள் தலையைப் புதைத்துக்கொள்ளும் நீர்க்கோழிபோல் வாழ்ந்து, என் வாழ்நாளில் முக்கியமான பருவத்தில் பத்து ஆண்டுகள் வரை இடிந்துவிட்டேன். இறுதியில் நான் 'செவி மந்தமானவன்' என்னும் மாற்ற முடியாத உண்மையை ஒப்புக்கொண்டு, நெஞ்சுறுதியுடன், என் குறைபாடுடன் எப்படியும் வாழ்வது என்று கங்கணங்கட்டியநாள் முதல்தான் என் வாழ்நாளில் உண்மையாக மகிழ்ச்சியை என்னால் காண முடிந்தது" என்று குறிப்பிடுகின்றார். இதை ஓர்ந்து செவிமந்தமானவர்களும், உறவினர்களும் பயன் பெறவேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

இலங்கைத் தமிழரின் இன்னல்.

தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டுள்ள இலங்கை வாழ் தமிழர் நிலையை எண்ணிச் செயலாற்றாது மாநில அரசும் நடுவிட அரசும் வாளா இருப்பது பொருத்தம் அன்று. பாகிசுத்தானிலிருந்து வருவோர்க்குச் காட்டும் பரிவு இலங்கையிலிருந்து துரத்தப்படுவோரிடம் காட்டாதது ஏனோ? இலங்கைத் தமிழரின் இன்னலைப்போக்குதல் தமிழக அரசின் தவிர்க்கலாகாக்கடமையும் பொறுப்பும்ஆகும்.

நமசிவாயரை நாளும் போற்றுக.

பேராசிரியர் கா. நமசிவாய முதலியாரின் வரலாற்றுக் குறிப்புப் பிறதோரிடத்தில் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

தமிழில் 'வித்துவான்' பட்டம் பெற்றோர் இன்று ஆயிரக்கணக்கில் ஆங்காங்குத் தமிழ்த் தொண்டு புரிந்து வருகின்றமை, பேராசிரியர் நமசிவாயர் ஆற்றிய பெரும் பணியாலாகும் என்பதனை அறிதல் வேண்டும். தமிழில் 'வித்துவான்' பட்டம் பெறச் சமச்கிருதமும் கற்றிருக்கவேண்டிய இடர்ப்பாடானநிலை இருந்தது. தாய்மொழியாம்தமிழில் புலமைப் பட்டம் பெற இன்னொரு மொழிப்புலமை இன்றியமையாதது என்பது தமிழை இழிவுபடுத்துவதாய் இருந்ததோடு தமிழ்ப் புலவர்களும் பெருகுவதற்கு இடம் அளித்திலது. பேராசிரியர் இதனை எண்ணி அரும்பாடுபட்டுச் சமசுக்கிருதத்தின் துணையின்றியே தனித் தமிழ் வித்துவான் தேர்வு எழுதும் திட்டத்தை உருவாக்கினர். ஆதலின் இன்று தனித் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றுள்ளோரும் பெறப்போவாரும் நமசிவாயரை மறவாது நாளும் போற்றுதல் வேண்டும். நமசிவாயர் புகழ் நாளும் வாழ்க.

'துவக்கம்' என்பது தவறு;
'தொடக்கம்' என்பதுதான் நல்வழக்கு

தமிழ்ப் பெருங்காவலர்

வள்ளல் கா. நமச்சிவாயர்

— சிறுவை நச்சினியார்க்கினியன்

வள்ளல் கா. நமச்சிவாயர் என்று விளித்தால்தான் தமிழ் உள்ளங்கள் குளிரும் ஏன்? வள்ளல் என்று சொன்னால் மட்டும் சில உள்ளங்களுக்கு முழு நிறைவு அளிக்காது. அவரைத் தாயினும் சாலப் பரிந்தூட்டும் தயாளனுக்கே அறிந்தோர் ஒப்பிடுவர். பௌராணிக காலத்தில் தோன்றி இருந்தால் தமிழ் அன்னையே இம் மண்ணுலகில் சில நாள் தங்க எண்ணி வந்தனள் எனக் கூறி இருப்பர், இக் கூற்றுகள் அனைத்தும் உயர்வு நவிற்சியின் பாற்பட்டன அல்லவே அல்ல; முற்றிலும் உண்மை. காரணங்கள் ஆயிரம் ஆயிரம்; உவமைகளோ நூற்றுக் கணக்கின. ஆனால் அந்த வள்ளல் இப் புவியில் ஒரு சிலருக்கு ஒரு சாதாரணத் தமிழ்ப் பண்டிதராகவே காட்சியளித்தார். இதற்குக் காரணம். தமிழ் மண் தொன்று தொட்டுச் செய்யும் தவறுகளில் ஒன்று.

வள்ளல் கா. நமச்சிவாயர் 1876 ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் வெள்ளி இரவு 10-30 மணிக்கு, வட ஆர்க்காடு மாவட்டத்திலே காவேரிப் பாக்கம் எனும் ஊரிற் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் இராமசாமி முதலியார்; தாய் அகிலாண்டவல்லி அம்மை. தந்தை ஒரு திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் தாம். வள்ளல் அவர்கள் தம் தொடக்கக் கல்வியைத் தம் தந்தையாரிடமே பயின்றார். எளிய குடும்பத்தினராகிய இவ வேலை தேடிச் சென்னைக்கு வந்து முதலில் ஒருதொடக்கப்பள்ளி ஆசிரியராக அமர்ந்தார்.

ஒரு நல்லாசிரியர் மகன் ஒரு சாதாரண ஆசிரியராக இல்லாமல் பேராசிரியராகத் திகழ வேண்டும் என்ற ஆவல். அத்துடன் அமையாது இயற்கையிலேயே தமிழ்க் கல்வியில் ஆர்வமும் நாட்டமும் உடையவராய்ப் பல தமிழ் நூல்களை விரும்பிக் கற்றார். ஒரு சிறந்த தமிழ் ஆசிரியரை நாடி முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்க ஆவல் மிக்கவராய்த் தேடினர். அந்தக் காலத்தில் தமிழ்ப் புலமையில் சிறந்தவராயும் புகழ் வாய்ந்தவராயும் திகழ்ந்த சென்னைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர் நிலைப்பள்ளியில் தமிழ்ப் புலமை நடாத்திய மயிலை மகா வித்துவான் திரு. சண்முகம் பிள்ளை அவர்களிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்ப்பயின்று சிறந்த தமிழ்ப் புலவரானார். மகா வித்துவான் திரு. சண்முகம் பிள்ளை அவர்களைத் தம் தந்தை போன்றே நினைந்து பத்தி செலுத்தி வழிபட்டார். தந்தைக்கு ஒப்பாகிய திரு சண்முகம் பிள்ளை அவர்கள் உலக வாழ்வினை நீத்தபின் அவர் தம் துணைவியை அவரது விருப்பப்படி தம் தாயைப்போலவே பேணி அன்பு செலுத்தி அவர் தம் இறுதி நாள்வரைக்காத்து வந்தார்.

ஆசிரியப் பணி

1891இல் சென்னை வந்து ஒரு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்தார். பின்னர் 1895 இல்ஓராண்டுக் காலம் சென்னை உயர் நீதி மன்ற அலுவலகத்தில் பணியாற்றினார். தமிழோடு இணைந்த உள்ளமுடைய இவர் அதனைவிட்டுத் தள்ளிச் செயின்ட் சேவியர் உயர் நிலைப் பள்ளியில் நான்கு ஆண்டுக் காலமும், பின்னர் நார்த்விக் மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும், அதன் பிறகு இப்பொழுது நேசனல் பாங்கு இருக்கும் கட்டிடத்தில் இருந்த சிங்க்லர்சு கல்லூரியிலும் தமிழ்ப் புலமை நடாத்தினார். 1902 ஆம் ஆண்டு முதல் 1914 ஆம் ஆண்டு வரை, சென்னை வேப்பேரி எசு பி சி உயர் நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராய்ச் சிறக்கப் பணி புரிந்தார், அக்காலத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையே பெண்களுக்கென த் தோற்றுவித்த 'இராணி மேரிக் கல்லூரியில்' தமிழ்ப்புலமை நடாத்தப் பாடம் சொல்லுவதில் பிறவியிலேயே திறம் படைத்த நவச்சிவாயர் திருமதி டி. லாகே அவர்களுடன் அரும்பாடுபட்டார். இந்த அம்மையார் தாம் வள்ளல் நமச்சிவாயரின் அறிவு குண நலம் முதலியவற்றைப் பாராட்டி இவர் தம் மணி விழா மலரில் குறிப்பிட்டுள்ளார். திரு. நமச்சிவாயர் ஓய்வு பெறுமுன்சிலகாலம் மாநிலக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராய் இருந்தார்.

பேராசிரியர் நமச்சிவாயர் அவர்களின் புலமை நலம் அறிந்த சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 1917 ஆம் ஆண்டு, தமிழ்த் தேர்வுக் குழுவின் தலைமைத் தேர்வாளராய் இருக்கச் செய்தனர். 1920 முதல் 1934ஆம்ஆண்டுவரை அரசினர் தமிழ்க் கல்விக் குழுவின் தலைவராய் இருந்தார். இவர்களது அரிய முயற்சியினாலேயே "7-டி" எனும் தனித் தமிழ் வித்துவான் தேர்வு நிலை உண்டாயிற்று அன்று அந்த வித்தினை இட்டதின் பயனாகத்தான் இன்று பலர் புலவர் பெருமக்களாகவிளங்குகின்றனர்; பலவித ஏற்றங்களும் சிறப்புகளும் பெற்றுள்ளனர். தமிழ் வித்துவான் பாட அமைப்புக் குழுவிலும் தேர்வாளர் குழுவிலும் இருந்து சிறந்த பணிகள் ஆற்றினார். அக்குழுக்களில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான ஆக்க நெறிகள் பல கண்டனர். தமிழ்நெறிக்கு மாறாக நடக்க ஒருபோதும் நினைக்க மாட்டார். தமிழ் ஆசிரியர்களின் வருவாய் அதிகமாக வேண்டும் என அயராது பாடுபட்டார்.

தமிழக வரலாற்றிலே அவர் செய்த மற்றொருசிறந்த செய்தி 'திருவள்ளுவர் திருநாள்' தோற்றுவித்தது. இத்தகைய சான்றோருக்கு—தமிழ்த் திருநாள்தோற்றுவித்த மாவீரருக்கு—ஒரு பேராசிரியருக்கு—ஒரு சிறந்த பதிப்பாசிரியருக்கு—நூலாசிரியருக்கு—பத்திரிகாசிரியருக்கு—இத்துணைக்கும் மேலாக ஒரு வள்ளல் பெருமகனாருக்குத் தமிழர்கள் சிலர் கூடிச் சிலைவைக்க நினைக்கின்றனர். அந்த நினைப்பு ஈடேற மக்கள் மனமுவந்துஉதவமுன் வருவார்களாக

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழித்திற முட்டறுத்தல் ... ...

பாலருந்தும் குழந்தை அழுதற்கு இதழ்களைத் திறக்கின்ற காலை மூக்கின் வழியாகக் காற்று வெளிப்படாமல் வாயின்வழிமாத்திரம் வெளிப்படுமானால் 'பா' என்ற ஒலி உண்டாகின்றது. வாய்வழிக் காற்று மிகுமானால் 'பப்பா' 'அப்பா' என்றசொற்கள் தோன்றுகின்றன. உலக மொழிகளனைத்திலும் அப்பா, அம்மா ஆகியசொற்கள் ஒன்றாயிருத்தற்குக் காரணம் மேற்கூறிய ஒலியியல் நுட்பமே. குழந்தையின் மழலையை இவ்வாறே மேலும் உற்று நோக்குவோமானால் அதன் வாயிலிருந்து 'தா' என்ற ஒலி எழுவதைப்பார்க்கலாம், இது நுனிநா, பல் மருங்கைத் தொடுவதனால் உண்டாகின்றது. அதனால் விரையில் குழந்தை 'தாத்தா' என்றும் 'அத்தை' என்றும் சொல்லத்தொடங்கிவிடுகின்றது. இத்தகைய வேறு பல சொற்களும் குழந்தையின் வாயிலிருந்து தாமே வெளிப்படுகின்றன. ஏறக்குறைய ஈராண்டுகளுக்குப் பிறகுதான் பிறர் பேச்சிலிருந்து தோன்றும் சொற்களைக் குழந்தை வலிந்து கற்கிறது. (தொடரும்)

(1-3-64 இதழின் தொடர்ச்சி)

பூங்கோதை

'கண்ணம்மா அவள் கைகளை நன்றாகப் பிடித்துக் கொள். அவள் உண்மையிலேயே ஒரு காட்டுப்பூனையாக மாறி விட்டாள்.'

'வெட்கமில்லை' ஒரு ஆண்பிள்ளையோடு சரியாக மல்லுக்கு நிற்கிறாயா? அதுவும் எனக்குக் கஞ்சி ஊற்றி வளர்க்கிற அந்தப் புண்ணியவதியின் மகனை அவர் தானே இந்த வீட்டுக்கே தலைவர்' என்று கூறினாள் கண்ணம்மா.

'தலைவர்! அவர் இந்த வீட்டுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால் எனக்கு இல்லை, நான் என்ன ஒரு டணிப் பெண்ணா?.

'இல்லை; அதை விட ஒருபடி கீழ்; பணியாளராவது உழைத்து உண்கிறார்கள். உனக்குப் போடுவது வெட்டிச் சோறு தானே; போ உள்ளே; அந்த மூலையிலே போய் உட்கார்ந்து உன்னுடைய போக்கற்ற நிலையையும், குறும்புத்தனத்தையும் நீயே எண்ணிப்பார்.' என்று எக்காளமிட்டாள்,

இதற்குள் பூங்கோதையை அப்பணிப் பெண்டிர் இருவரும் செங்கமலம் குறிப்பிட்ட அச்சிவப்பறைக்குள் தூக்கிக் கொண்டு வந்து அங்குக் கிடந்த ஒரு முக்காலியில் உட்காரச் செய்தார்கள். பூங்கோதை அங்கிருந்து திமிறிக்கொண்டு ஓடத்துணிந்திருப்பாள்; ஆனால் காளியையும் கண்ணம்மாவையும் திமிறுவது பூங்கோதைக்கு அத்துணை எளிதன்று. காளி அவளை இறுகப் பிடித்துமுக்காலியோடு அழுத்திக் கொண்டு 'கண்ணம்மா இந்தக்குட்டி அடங்கி உட்கார மாட்டாள் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு வா; முக்காலியோடு சேர்த்துக் கட்டி விடலாம்' என்று கத்தினாள்.

கண்ணம்மாவும் கயிற்றை எடுத்துக் கொண்டு வருவதற்காகப் புறப்பட்டாள். அதனைக்கண்ட பூங்கோதை மேலும் தன்னைத் துன்பத்திற்கும் இழிவிற்கும் உட்படுத்திக்கொள்ள விரும்பாமல் என்னைக்கட்டவேண்டாம்; நான் அசைய மாட்டேன்' என்று தேம்பிக் கொண்டே கூறினாள்

பூங்கோதை ஓரளவு அடங்கிவருவதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே காளி தன் பிடியைத் தளர்த்தினாள்.

பிறகு காளியும் கண்ணம்மாவும் சற்று பின்னடைந்து பூங்கோதையை ஒரு கிறுக்கியைப் பார்ப்பது போல் ஐயமும் அச்சமும் விரவ நோக்கினர்;

'இதற்கு முன் இவள் இதுபோல நடந்து கொண்டவளே அன்று,'' என்றாள் காளி.

''ஆனால் அந்த அடங்காப்பிடாரித்தனம் எப்பொழுது அவளுக்கு உண்டு. நான் அம்மாவிடம் பன்முறை இதைத் தெரிவித்திருக்கிறேன். அவர்களும் அதனை ஒப்புக்கொண்டுள்ளார்கள். முளைத்து மூன்றிலைக் கொள்ள வில்லை; அதற்குள் இவ்வளவு கைகாரியாக இருக்கிறாளே ஊம்... என்று பெருமூச்சு விட்டாள் கண்ணம்மாள்.

காளி கண்ணம்மாவுக்கு விடையிறுக்காமலே பூங்கோதையை நோக்கி ''அம்மாக்கண்ணு பூங்கோதை நீ ஒன்று மட்டும் நன்றாக நினைவிலே வைத்துக்கொள்; செங்கமலத்தம்மாள் ஏதோ போனால் போகிறதென்று உன்னை அவர்களோடு இருக்கச் செய்து சோறும் துணியும்கொடுத்து வருகிறார்கள்; இன்றைக்கு 'வெளியே போ என்று துரத்தினால் தெரியும்; திருவோட்டைத் தூக்கிக்கொண்டு தெருத்தெருவாக போகவேண்டியது தான்,'' என்று ஒரு அலைசு அலைகி விட்டாள்.

பூங்கோதைக்கு இந்தக் கொக்கரிப்பெல்லாம் புதிதன்று; 'வெட்டிச் சோறு தின்பவள்' என்பதும். 'விரட்டி விடுவதென்பதும்' நாள்தோறும் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல் தான். உள்ளத்தின் அடியில் உறுத்தல் ஒடுங்கிக்கிடந்தாலும், அச்சொற்கள் முற்றும் பொருள் தருவனவாகவில்லை.

காளியும் கண்ணம்மாவும் பூங்கோதையிருந்த அறைக்கதவை இழுத்துப்

வித்துவான் மு. இராமகிருட்டினன்
எம். ஏ., பி. டி.

பூட்டி விட்டுப் போய் விட்டார்கள். தீச்செயல் செய்தாரை மீளா இருளில் தள்ளிவிட்டுச் செல்லும் நரகக் காவலா என்றே அவர்கள் தம்மைப் பற்றி நினைத்துகொண்டு சென்றனர்,

பூங்கோதை அடைபட்டுக் கிடந்த அறை செந்நிறம் ஊட்டப்பட்டு அச்சந்தருவதாக இருந்தது. அந்தப் பெருமனையில் அந்த அறைதான் மிகப் பெரியது அங்கிருந்த இருக்கைப் பொருட்களும் எழில்தரு பொருட்களும் அந்த அறைக்குப் பெருமிதக் காட்சியைத் தந்திருக்க வேண்டும். தோதகத்தியில்வேலைப்பாடுகளோடு செய்யப்பட்ட கட்டிலின் மேற்கட்டியும், புனை தொங்கல்களும் வியப்பைத் தருவனவாகவிருந்தன. அறையின் இருபுறத்தும் அமைக்கப் பட்டிருந்த மான் கட்காலதரின் வழியே குளிர் காற்றும் இடையிடையே மின்னல் ஒளியும் நுழைந்து வந்தன. ஆடை நிலைப்பேழையும் ஆடி நிலைப்பேழையும் 'துவாரபாலகரைப்போல் மின்னல்ஒளியால் இடையிடையே அச்சுறுத்தின. அறையின் நடுவன்வட்டப்பலகையும்அவற்றைச் சூழ இருக்கைகளும் கிடந்தன. இருக்கைகளுக்கு நடுவணதாக அமைக்கப்பட்டிருந்த ஒன்று அரியாசனம்போல் காட்சி தந்தது, அவை யாவும் குருதியன்ன செந்நிறத் துணிகள் துன்னப்பெற்றுத் துணுக்கத்தை ஊட்டின.

தப்பி ஓடுவதற்கும் வழியில்லை. சோறும் நீருமின்றி அணு அணுவாகச் சோர்ந்து சாகவேண்டியதுதான் முடிவுபோலும் என்று எண்ணினாள். அவ்வாறு எண்ணிக்கொண்டே மீண்டும் தான் உட்கார்ந்திருந்த முக்காலியை நோக்கி நடந்தாள். அப்பொழுது தன்னுடைய குருதி தோய்ந்த உருவத்தை மங்கலாக எதிர்ப்பட்ட நிலையாடியில் கண்டாள். அவளுடைய துன்ப அலைகள் மேலும் மேலும் எழுந்து மோதின. அவ்வாறு தான் துன்புறுவதற்குத் தான் எவ்வளவில் பொறுப்பாளி என்று நினைந்து நினைந்துக் கரைந்தாள்:

பகலிலேயே அந்த அறையில் போதுமான வெளிச்சம் கிடையாது. அதிலும் இரவு நெருங்கநெருங்க இருளும் கவ்விக்கொண்டு வந்தது. பூங்கோதைக்கிருந்த ஓரளவு துணிவும் குறைந்துவிட்டது. தன்னுடைய மாமனார் சிவக்கொழுந்து உயிருடன் இருந்திருந்தால் தனக்கு இத்துணை இடுக்கண் ஏற்பட்டிருக்குமா என்று எண்ணினாள். அவளுடைய கண்கள் இருண்டன; தலை சுழன்றது. என்ன நிகழ்கிறதென்றே அவளுக்குத் தெரியவில்லை; சோர்வுற்று விழுந்தாள். சிறிது நேரத்தில் ஒரு உருவம் அங்கு ஊசலாடுவதுபோல் தென்பட்டது. துணிகள் துன்னப்பெற்று துணுக்கத்தை ஊட்டின.

அந்த அறையில் வெளிச்சமோ வெப்பமோ கிடையா; ஆள் நடமாட்டம் அடிக்கடி கிடையாது. ஒரே அமைதி-அச்சந்தரும் அமைதிதான் அங்கு நிலவியது, வாரத்திற்கு ஒரு முறை பணிச்சிறுமி வந்து அங்குள்ள பொருள்களின்மேல் படிந்து கிடந்த தூசியைத் துடைத்துவிட்டுச் செல்வாள்.

(தொடரும்)

திருக்குறள் நெறி

— கதி. சுந்தரம்

[23-2-64ஆம் நாள் புதுக்கோட்டைத் திருக்குறள் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கம்]

பேரன்புகொண்டோரே! பெரியோரே! வணக்கம். வாழ்வியலை அமைத்துத் தருகின்ற புலவர் பெருமக்களுள் திருவள்ளுவர் முதன்மை பெற்று விளங்குகின்றார். திருவள்ளுவரின் உயரிய கருத்துக்கள் உலகமக்கள் அனைவரின் உள்ளத்தையும் கவர்ந்துநிற்கக் காண்கின்றோம். தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒருவிதை, வளர்ந்து, மரமாகி, மன்னர்தம் பெரும் படைக்கும் 'நிழல் தந்து நிற்கும்' காட்சியைக் காண்கின்றோம். அஃதேபோல், குறள்வெண்பாவால் ஆகிய திருக்குறள், பல்வேறு துறைகளில் உள்ளார்க்கும் அறநெறியை எடுத்தியம்பும் ஆற்றல் பெற்று விளங்குவதைக் காணலாம். காப்பியம் செய்த பெரும்புலவர்களும் அரசியல் தலைவர்களும் சமயக்குரவர்களும்திருக்குறளை எடுத்து மேற்கோள் காட்டி மேன்மை பெறலாயினர். திருக்குறட் கவியருவியிலே திளைக்கும் மாந்தர் இன்பமும் நல்ஒளியும் பெற்றுத் திகழக்காண்கின்றோம். ஒரு காலத்திலே வாழ்கின்ற மனிதன், இக்கவிதையின் கருத்து இதுதான் என்றுகூறி முடித்துவிடக்கூடியதன்மையில் கவிதை அமைவது பெருஞ்சிறப்பினைத் தராது. எக்காலத்தவரும் கவிதையைப் படிக்கும்பொழுது, ஒப்புக்கொள்ளக்கூடிய விழுமிய கருத்தினை உடையதாய்ப்புதுமை உணர்வுக்கும் இடம்தரத்தக்கதாய் நவில்தொறும் நயம் பயப்பதாய் நூல் அமைதல் வேண்டும். அத்தகைய முறையில் திருக்குறள் அமைந்திருப்பதால்தான், 'எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால்இல்லாதஎப்பொருளும் இல்லை' என்றுகூறும் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது.

'அறம்தகளி; ஆன்ற பொருள்திரி; இன்பு
சிறந்தநெய்; செஞ்சொல்தீ; தண்டு-குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு'

எனப் புலவர் பாராட்டுவாராயினர். 'தத்துவம் என்ற தாய்க்கும் பண்பாடு என்ற தந்தைக்கும் பிறக்கும் குழந்தைதான் கவிதை' என்ற அறிஞர் கருத்திற்கேற்ப, தத்துவமும் பண்பாடும் செறிந்தினிது இலங்கும் சீரிய நூல் திருக்குறள் ஆகும்.

திருக்குறள் கூறும் நெறிகள் பல; சிலவற்றை இங்கே காண்போம்.

மனிதன் தன்னைப்பற்றி முதலில் நன்குணர்தல்வேண்டும் என்றும் மனத்தாலும் மொழியாலும் செயலாலும் தூயனாக இருத்தல் வேண்டும் என்றும் திருக்குறள்நெறி மிகமிகவற்புறுத்துகிறது. இந்த அடிப்படைத் தத்துவத்திலே பல குறள்கள் அமைந்துள்ளன.

முதலில் தன்னைப்பற்றி உணர்தல் வேண்டும் என்பது. பல குறள்களில் இக்கருத்து அமைந்துள்ளது. சிலவற்றை நோக்குவோம்.

1 தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. [என்றாங்கு

2 தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

3 கெடுவல் யான்என்பது அறிக தன்நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

4 தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

5 தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான்
மன்உயிர்க்கு இன்னா செயல். [என்கொலோ

முதலிய திருக்குறள்களை நோக்கின் இவ்வுண்மை புலனாகும்

இந்தியால் தமிழ் கெடுமா ?

கருத்தரங்கத்திற்குக் கட்டுரைகள் பல வந்துள்ளன. யாவும் வெளியிடப்படும். இன்னும் வரவேற்கப்படுகின்றன. விரும்புவோர் விரைந்து எழுதுக. செந்தமிழோர் தெளிவுபெற உதவும்.

'குறள் நெறி'யில் ஒழுகுவோமென உறுதிமொழி கூறியுள்ள **குறள்நெறியாளர்கள்.**

1—3—64 இதழின் தொடர்ச்சி)

16 திரு அ. நா. இளங்கோ, நிரவி, காரைக்கால்

17 திரு து. சீனிசாமி, செந்திக் குமாரர் கல்லூரி, விருதுநகர்

18 திரு வி. சு. கோவிந்தன், குட்செட் தெரு, மதுரை-1

19 திரு வெ. பெ. இராமசாமி, கருமன் செட்டிக்காடு, பள்ளிபாளையம், சேலம்

20 திரு வெ. பெ. பழனிச்சாமி, கருமன் செட்டிக்காடு

21 திருமதி பழனியம்மாள்இராமசாமி, செட்டிகாடு

22 திரு பெருமாள், செயலாளர்: வள்ளுவர் மன்றம், இறவார்பட்டி, சல்வார்பட்டி அஞ்சல் (வழி) சிவகாசி

23 திரு சா வேதமுத்து, 1-3-52A பிள்ளையார் கோவில்தெரு, சிவகாசி

24 திரு சு. சுடலைமுத்து, 61-எ, மேலப்பொன்னகரம், 6 வது தெரு: மதுரை-10

25 திரு, பா. நல்லப்பெருமாள், 6 பி. எண் 6 தெரு, அலசூர் பெங்களூர்-8

26 து. பொ. பெத்துராசன். 67, வடுகர் தெரு, அறந்தாங்கி

27 திரு. நாஞ்சில் இளஞ்செழியன், தாமசு சந்து. அழகப்புரம் அஞ்சல், குமரி மாவட்டம்

28 திரு சொ. ஆழ்வார், தமிழ்நாடு பற்றொழில் நுட்பக்கல்லூரி, மதுரை-11

29 திரு க. இராமசாமி, ம. தி. தா. கல்லூரி, நெல்லை-4

30 திரு பி. செயராமன், தெற்குத் தெரு, வாண்டையாரிருப்பு, அஞ்சல், தஞ்சை.

31 திரு பு. ஆ. ஏ. தாசு, ஆசிரியர் "ஏற்றம்." நெய்வேலி-1

32 திரு பெ. மா. குமாரசாமி, தோட்டப்பாளையம், வேலூர்

33 திரு இரா நாராயணசாமி, சாலியத் தெரு, மாரியம்மன் கோவில் அஞ்சல், தஞ்சை

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.